பக்கங்கள்:17 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 15 ஞாயிற்றுக்கிழமை 31.07.2022 கதிர் 268

### இனி இது ரகசியம் அல்ல!

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பார்கள். அந்தக் கதை மாதிரியாகி இருக்கின்றது வடக்கு ஆளுநரின் செய்கை.

இதுவரை எந்த விசாரணைக் குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகாத மாகாண செயலா ☞2

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு முதலாமிடம் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கு நிபந்தனை!

## நேரடியாக முகத்திலடித்தால் போல் விதித்தார் மனோ கணேசன்



காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் என்ற முறையில் சில கோரிக்கைகளை முன் வைத்துள்ளீர்கள். ஆள்கடத்தல், முறைதவறிய கைது, அவசரகால சட்டம், பயங்கரவாத தடை சட்டம், அரசியல் கைதிகள் விடுதலை, மனித உரிமை பேணல், மக்களுக்கு நிவாரணம் ஆகியவற்றை நாம் ஏற்கிறோம். இவை எங்கள் எதும் நீண்டகால கோரிக்கைகள்தான். பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளை விடுவிப்பதில் 10, 15, 20 வருடங்களாக சிறையில் இருந்து, தம் வாழ்வையே இழந்து நிற்கும் தமிழ் அரசியல் கைதிகள் முதலிடம் பெறவேண்டும் என்பதை உறுதிசெய்யுங்கள். இல்லாவிட்டால் எமது கட்சி உங்களுடன் ஒத்துழைக்க முடியாது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

காலிமுக போராட்டக்கார இயக்கத்தினர் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று சனிக்கிழமை முற்பகல் நடத்திய கலந்துரையாடலில் அழைப்பின் பேரில் கலந்துக்கொண்ட ☞2

# ரணிலின் சர்வகட்சி ஆட்சியை வரவேற்கின்றது கூட்டமைப்பு

## 'மொட்டு'வின் ஆதிக்கம் இல்லாமல் அது இருக்கவேண்டும் என்கின்றார் சுமந்திரன்



வவுனியா, ஜூலை 31

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி ஆட்சியை அமைக்க விரும்பினால் அதனை நாம் வரவேற்போம். பொருளாதாரச் சிக்கலில் இருந்து நாடு மீண்டெழ சர்வகட்சி ஆட்சி தான் ஒரே வழி. ஆனால், அது உண்மைத்தன்மையான சர்வகட்சி ஆட்சியாக இருக்க வேண்டும். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதிக்கத்தில் இருக்கின்ற சர்வகட்சியாக அது இருக்கக்கூடாது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். ☞2


## வடமராட்சியில் கொரோனா; வயோதிபர் ஒருவர் மரணம்!

நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸின்பாதிப்புநாள்தோறும் அதிகரித்து வருகின்ற நிலையில், யாழ். வடமராட்சியில் ஒருவர் தொற்றுக்குள்ளாகி சாவடைந்துள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 91 வயதுடைய வயோதிபரே தொற்றால் உயிரிழந்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த குறித்த வயோதிபருக்குக் கொரோனா அறிகுறிகள் தென்பட்ட நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

## தலதா மாளிகையில் ரணில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி ஸ்ரீதலதாமாளிகைக்கு நேற்றுச் சென்று சமயக்கிரியைகளில் ஈடுபட்டார்.

தலதா ☞2

## இவ்வாரமும் பாடசாலை மூன்று நாள்கள் மட்டுமே

கடந்த வாரம் பாடசாலைகள் நடத்தப்பட்டதைப் போலவே ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரை பாடசாலைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, அரச மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளை திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாள்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மாணவர்கள் வீட்டிலிருந்து கல்வி கற்க ☞03

## நாணய நிதியத்தினுடனான பேச்சு நல்ல முன்னேற்றம் என்கிறது அரசு

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தணிக்கவும் நல்ல பொருளாதார நடைமுறைகளை ஏற்படுத்தவும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான நோக்கத்துடன் நாணய நிதியத்துடன் நடத்தப்பட்ட பேச்சுகளில் அரசாங்கம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

ஜனாதிபதியின் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு, கடன் நிலைத்தன்மை குறித்த உறுதியான திட்டம் முன்வைக்கப்பட வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால அரசியல் ஸ்திரமின்மை ☞03

## மகாவலியில் 2 சிறுவர்களை காணோம்!



கண்டி, ஜனசவிகம பிரதேசத்தில் மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

நீராட வந்த நால்வரில் ☞03

## நேற்று மாத்திரம் 83 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

இலங்கையில் நேற்று 83 பேர் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 65 ஆயிரத்து 626ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்று முன்தினம் 3 கொரோனா இறப்புக்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார ☞2

## 4 படகுகளில் ஜூனில் ஆஸி வந்த 125 பேர் திரும்பவும் இலங்கைக்கு

இலங்கையில் இருந்து கடந்த மாதம் சட்டவிரோதமாக குடியேற்றவாசிகளை ஏற்றி வந்த நான்கு படகுகளை ஆஸ்திரேலிய கடற்பரப்பில் வைத்துக் கைப்பற்றியதாக ஆஸ்திரேலிய கரையோர பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

அந்த படகுகளில் வந்த 125 பேரை பொறுப்பேற்று இலங்கைக்கு திருப்பி அனுப்பியதாக ஆஸ்திரேலிய கரையோர பாதுகாப்பு படையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ☞03

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ளர்கள் இருவரை, மாகாணத்துக்கு வெளியே பந்தாட முயன்ற ஆளுநரின் நடவடிக்கை, அந்த நடவடிக்கை தொடர்பான விசாரணைகளுக்குப் பிள்ளையார் சுழி போட்டிருப்பதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

இது தொடர்பாக வடக்கின் மூத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி ரணிலுக்கு எழுதிய கடுமையான வாசகங்களமைந்த கடிதத்திற்கு மேலதிகமாக, அரச சட்டக் கோவைகளின் ஆதாரங்களுடன் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதமும் வேலை செய்யத் தொடங்கி இருப்பதாகத் தெரிகிறது.

நாட்டில் 90களில் யுத்தம் அனல் பறந்த போது, வடக்கில் யாழ் குடாநாட்டின் சேவைக்கு வந்த இந்த அதிகாரிகள் இருவரும், அந்த யுத்த காலம் முழுவதும் கடும் சிக்கல்களுக்கு மத்தியிலும் மக்களோடு மக்களாக நின்று பிடித்தவர்கள் இந்த மண்ணின் துயரமும் மண்ணின் வாசனையும் அறிந்த அதிகாரிகள். குடாநாடு யுத்தத்தினால் வீழ்ந்த போது எல்லாம் தாமும் வீழ்ந்து, குடாநாடு நிமிர்ந்த போது அதனோடு நிமிர்ந்து அதிகாரிகள் இவர்கள்.

இவ்வளவு நெருக்கடிகளுக்கும் மத்தியிலும் எந்த ஒழுக்கற்று நடவடிக்கையையும் கூட சந்தித்திராத நேர்மையான அதிகாரிகள் அவர்கள்.

நேற்று யாழ்ப்பாணப் பக்கம் வந்து ஒதுங்கியவர்கள், இவ்வளவு காலமும் மண்ணோடு நின்று பிடித்த நேர்மையான அதிகாரிகளைத் தங்களின் நிதிக் குழப்ப நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கவில்லை என்பதனால் பந்தாட அனுமதிப்பது மிகவும் மோசமான செயலாகும் என்ற கருத்து நிலையே பொதுவாக எல்லா இடங்களிலும் நிலவுகின்றது.

ஜனாதிபதி ரணில் தமது Mr.Clean நிர்வாகத்தை அந்த வகையில் முன்னெடுக்க வேண்டுமானால் இத்தகைய Mr.Dirty களை களைவது முக்கியம். இல்லையேல் ஜனாதிபதியின் பிரதிநிதி இங்கு ஜனாதிபதிக்கு இழுக்குத் தேடித் தருவதாகதான் விவகாரம் அமைந்து விடும்.

இது ஜனாதிபதி ரணிலுக்கும் நன்கு விளங்கும். Mr.Dirtyயை வீட்டுக்கு அனுப்பும் பணி விரைந்து நிச்சயம் நடக்கும் என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

அவரது இடத்துக்குப் புதியவர்கள் பெயர்கள் பல அடிபடுகின்றன. பிறக்கும் புதிய வாரத்தில் இது குறித்துத் தீர்க்கமான முடிவுகள் வரும் என எதிர்பார்க்கிறேன். அது வரைப் பொறுத்திருங்கள்.

– மின்னல் –

## தலதா மாளிகை,,,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாளிகைக்கு வருகை தந்த ஜனாதிபதி, கண்டி நகரபிதா கேசர சேனநாயக்க மற்றும் அமைச்சர்களால் வரவேற்கப்பட்டு தலதா மாளிகையின் பிரதான நுழைவாயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஜனாதிபதியை தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல மற்றும் நான்கு மகா தேவாலய பஸ்நாயக்க நிலமேமார் வரவேற்றனர்.

அதன்பின்னர், தலதா மாளிகையில் புனித தந்ததாது பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மேல்மாடிக்குச் சென்ற ஜனாதிபதி, அங்கு சமய வழிபாடுகளில் ஈடுபட்டு மகா சங்கத்தினரின் ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

சமய வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஜனாதிபதி, தலதா மாளிகையில் சிறப்பு விருந்தினர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்துக்குக்குச் சென்று நினைவுக் குறிப்பேட்டில் நினைவுக் குறிப்பொன்றை இட்டார்.

இதன்போது அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களானமஹிந்தானந்தஅளுத்கமகே, திலும் அமுனுகம, குணதிலக ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதி ஆலோசகருமான ருவன் விஜயவர்தன, ஐ.தே.க. பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க, ஐக்கிய லக் வனிதா முன்னணியின் தலைவி சாந்தினி கோன்கஹகே மற்றும் கம்பளை நகர பிதா சமந்த அநுரகுமார உள்ளிட்ட கண்டி மாவட்ட அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## ரணிலின் சர்வகட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியாவில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று கட்சி உறுப்பினர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சர்வகட்சி அரசில் இணைந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய கடிதம் எனக்கும் கிடைத்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீண்டு வர வேண்டுமாக இருந்தால் குறுகிய காலத்துக்காவது சர்வகட்சி ஆட்சி அமைய வேண்டும். இல்லையெனில் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேண முடியாது.

அப்படியொரு சர்வகட்சி ஆட்சி வேண்டும் என்பதற்காகத்தான் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தெரிவின்போது டலஸ் அழகப்பெருமவுக்கு நாம் ஆதரவு கொடுத்தோம்.

எதிர்க்கட்சியில் அமைந்துள்ள அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் உள்ள சிலரும் இணைந்து ஆட்சி அமைத்தால்தான் அது சர்வகட்சியாக இருக்க முடியும்.

இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்தவர்கள் முழுக்க முழுக்க ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக் கட்சிக்காரர்கள். அவர்கள் ஒன்றாகச் செயற்பட்டமையால் சர்வகட்சி ஆட்சியை அமைக்க முடியாமல்போனது.

ஆனால், தற்போது ஜனாதிபதியாக வந்த பின் ரணில் விக்கிரமசிங்க ஒரு சர்வகட்சி ஆட்சியை அமைக்க விரும்பினால் அதனை நாம் வரவேற்போம். பொருளாதாரச் சிக்கலில் இருந்து நாடு விடுபட அதுதான் ஒரே வழி. ஆனால், அது உண்மைதன்மையான சர்வகட்சி ஆட்சியாக இருக்க வேண்டும். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதிக்கத்தில் இருக்கின்ற சர்வகட்சியாக அது இருக்கக் கூடாது. ஏனெனில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, மக்கள் ஆணையை இழந்த கட்சி. அதனாலேயே அந்தக் கட்சியின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பதவி விலகியிருந்தார்கள் – என்றார்.

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மனோ எம்.பி. அங்கு மேற்கண்டவாறு பட்டவர்த்தனமாகக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

ரணில் இன்று ஜனாதிபதி. அவருடன் அரசியல் காரணங்களுக்காக எதிரணி என்ற முறையில் நாம் முரண்படலாம். முரண்பாடுகள் உள்ளன. ஆனால், அவர் சட்டப்படித்தான் ஜனாதிபதி ஆகியுள்ளார். இடைக்கால ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்றத்தில்தான் தெரிவு செய்யப்பட முடியும் என சட்டம் கூறுகிறது. அதன்படி அவர் 134 வாக்குகளை பெற்று அவர் ஜனாதிபதி ஆகியுள்ளார். தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பிக்கள் மாற்று வேட்பாளருக்கு வாக்களித்தோம். அது எம் அரசியல் கொள்கை நிலைப்பாடு. ஆனால், ரணில் இன்று ஜனாதிபதி.

இன்றைய நாடாளுமன்றம் மக்களின் மனவுணர்வுகளைப் பிரதிபலிக்கவில்லை. வெளியே மக்கள் மத்தியில் தேர்தல் நடந்திருந்தால், முடிவுகள் வேறு மாதிரி இருந்திருக்கும். ஆகவே இயன்றவரை சீக்கிரம் புதிய ஒரு நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு, புதிய மக்கள் ஆணை பெறப்பட்டு, புதிய நாடாளுமன்றம் அமைய வேண்டும். ஆகவே சீக்கிரம் புதிய ஒரு நாடாளுமன்ற தேர்தல் தேவை என்பதையும் மேலதிக ஒரு கோமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# யோகக்கலை வகுப்புகள் ஆரம்பம்

யாழ்.யோக வித்யா பீடத்தினால் இலவசமாக யோகக்கலை வகுப்புகள் திருநெல்வேலி வடக்கு பழங்கிணற்றடி பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் எதிர்வரும் 06.08.2022 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நடைபெறும். இவ் வகுப்புகளில் 19 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் இருபாலாரும் கலந்துகொண்டு பயிற்சி பெறமுடியும் எனவும், சுமார் மூன்றுமாதகாலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பயிலவிரும்பும் ஆர்வமுள்ளவர்கள் 06.08.2022 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு நேரில் வந்து பதிவுகளை மேற்கொண்டு இவ் வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும் எனவும், மேலதிக தகவல்களை 0771041455 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ‘மொட்டு’விலிருந்து விலகியவர்களை வளைத்துப்போட பஸில் தீவிர முயற்சி

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சியிலி ருந்து சுயாதீனமாகச் செயற்படும் உறுப்பினர்கள் சிலரை மீண்டும் கட்சியில் இணைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவின் வழிகாட்டலுடன் இதற்கான நகர்வுகள் இடம்பெறுகின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருந்து சுயேச்சையாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் அடுத்த வாரமும் பல கலந்துரையாடல்கள் இடம் பெறவுள்ளன என்று அக்கட்சியின் அரசி யல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் கட்டளைச் சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரத்தில் மூன்றில் இரண்டு பங்கு கட்சிக்குத் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

இந்த விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி சாகர காரியவசம் எம்.பியிடம் ஊடகங்கள் வினவியபோது, சதிகாரர்களிடம் சிக்கியுள்ள தமது கட்சியின் குழுவொன்று எதிர்காலத்தில் நிச்சயமாகப் பொதுஜன முன்னணியில் இணையும் என்று தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் கட்சியின் பலத்தைக் காட்டுவதற்கு ஏற்கனவே பல வியூகங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்றும், அந்தத் தேர்தலில் தமது கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை நிச்சயமாகப் பெற்றுக்கொள்ளும் என்றும் பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் மேலும் கூறினார்.

இங்கே என்னருகில் அமர்ந்து இருக்கும் முன்னிலை சோலிச கட்சி நண்பர் புபுது ஜாகொடவின் கட்சி பொது செயலாளர், குமார் குணரத்தினம் நாடாளுமன்றத்துக்கு வெளியே மக்கள் சபை அமைய வேண்டும் என கூறுகிறார். எம்மை பொறுத்த அளவில், நாடாளுமன்றம் தான் இன்று இந்நாட்டில் உள்ள மிகப் பெரும் மக்கள் சபை. அந்த நாடாளுமன்றத்தை எரிக்க முடியாது. ஆகவே அதைத் தேர்தல் மூலம் கைப்பற்றுங்கள்.

நேற்று மாலை, ஜனாதிபதி ரணில், எமது கட்சிக்கும் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் தேசிய அரசு, அமைச்சர் பதவிகள் பற்றி எதுவும் இல்லை. நாடு இன்று எதிர்கொள்ளும் அரசியல், பொருளாதார, சமூக சவால்களை சந்திக்க தேசிய கலந்துரையாடலில் கலந்துக் கொள்ள எம்மை அவர் அழைத்துள்ளார்.

இதுபற்றி நமது கட்சி அரசியல் குழு முடிவு செய்யும். ஆனால், நாம் இந்த தேசிய கலந்துரையாடலுக்கான அழைப்பை சாதகமாக பரிசீலிப்போம். போராட்டக்காரர்கள் மீதான, ஆள்கடத்தல், முறைதவறிய கைது, அவசரகால சட்ட பயன்பாடு, பயங்கரவாத தடை சட்ட பயன்பாடு ஆகியவற்றை நிறுத்துங்கள் என நாம் அவரை சந்தித்து கோருவோம். இதுதான் ஜனநாயக கதவுகளை திறக்கும், தடைகளை நீக்கும் தேசிய கலந்துரையாடல். அதை அவருக்கு எம்மால் சொல்ல முடியும்.

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை தான். அதையும் நாம் ஜனாதிபதி ரணிலிடம் சொல்வோம். உங்கள் கோரிக்கை பட்டியலில் 10, 15, 20 வருடங்களாக சிறையில் இருந்து, தம் வாழ்வையே இழந்து நிற்கும் தமிழ் அரசியல் கைதிகள் முதலிடம் பெறவேண்டும் என்பதை உறுதி செய்யுங்கள். இல்லாவிட்டால் உங்களுடன் எமது கட்சி உங்களுடன் ஒத்துழைக்க முடியாது. – என்றார்.

# ரஞ்சனை நேரில் சந்தித்தார் சஜித்

மனிதாபிமானம் கொண்ட, மக்கள் மனதை வென்ற அரசியல்வாதியான ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விரை வில் விடுதலை கிடைக்கும் என நானும் அனைத்து அரசியல்வாதிகளும் மற்றும் சகல இலங்கையர்களும் எதிர் பார்த்துள்ளோம்.

– இவ்வாறு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று பார்வையிட்ட பின் னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

நீண்ட நாட்கள் செல்வதற்கு முன் அனைவரின் எதிர்பார்ப்பாக இருக்கும் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விடுதலை கிடைக்கும் என நான் எதிர்பார்த்துள்ளேன். அந்நாள் வரும் வரை காத்திருக்கின்றேன்.

ரஞ்சன் ராமநாயக்க மனிதாபிமான மிக்க அரசியல்வாதிவாதி. மக்கள் சார் கலைஞர். மக்கள் செல்வாக்குள்ள பிரபலம். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அவர் மகத்தான பணிகளை ஆற்றியுள்ளார்.

நல்ல பண்புகளைக் கொண்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று நான் நேரில் சந்தித்து நீண்ட நேரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டேன்

அவர் சுதந்திர குடிமகனாக சமூகத்துக்குத் திரும்பி, உறுதியுடன் சமூக நீதிக்காகப் பாடுபடுவதைப் பார்ப்பதை எனது ஒரே நோக்கம் – என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கையின் பிரகாரம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்குப் பொதுமன்னிப்பளித்து அவரை விடுதலை செய்வதற்கான அனைத்துச் செயற்பாடுகளும் பூரணத்துவம் அடைந்திருக்கும் நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று ரஞ்சன் ராமநாயக்கவை நேரில் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடியமை ரஞ்சன் ராமநாயக்க விடுதலையானதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கமே சென்று விடுவாரோ என்ற அச்சம் காரணமாக இருக்கலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

## நேற்று மாத்திரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சின் தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை பதிவான கொரோனா இறப்புக்களின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 556 ஆக அதிகரித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26.06.1933
மறைவு 11.08.2021

## திருமதி கண்மணி நவரத்தினம்

அன்பு, அமைதி, அடக்கம்
அறவழியில் வாழ்வு
அனைத்தும் நிறைந்த அரவணைப்பு
அதனால் நெறி நிற்கின்றோம்

**வெள்ளவத்தை,
கொழும்பு,
31.07.2022**

**உங்கள் நினைவு என்றும்
வழிகாட்டும்.
- குடும்பத்தவர்கள் -**

## நாணய நிதியத்தினு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படாத முன்னைய அரசாங்கத்தின் அரசியல் கொள்கை காரணமாக இது தடைப்பட்டது.

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசியல் ஸ்திரமான அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்துக் கட்சி ஆட்சி அமைப்பதற்கான அரசியல் பேச்சுகள் வெற்றி பெற்றுள்ளன. இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சை வெற்றிகரமாக முடித்து, நிதி ஸ்திரத்தன்மையை உருவாக்க தேவையான முதல் படியை எடுக்க முடியும் என்பதே அரசின் நிலைப்பாடாகும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இவ்வாரமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடியும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

## 4 படகுகளில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2015ஆம் ஆண்டுக்கு பின்னர் ஒரு மாதத்தில் அதிகளவான சட்டவிரோத குடியேற்றவாசிகள் ஒரே தடவையில் பிடிப்பட்டது இதுவே முதல் முறை எனவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மகாவலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருவர் இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பல்லகெலே பிரதேசத்தில் வசிக்கும் 13 மற்றும் 14 வயதுடைய இரண்டு சிறுவர்களே காணாமல் போயுள்ளனர்.

அவர்களைக் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர்.















காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# உரியதைச் செய்யுங்கள்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வகட்சி அரசு அமைக்கும் முயற்சி தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பின் முதல் பிரதிபலிப்பு வெளியாகியிருக்கின்றது. பொறுப்புடன் கருத்து வெளியிட்டிருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி ஆட்சியை அமைக்க விரும்பினால் அதனை நாம் வரவேற்போம். பொருளாதாரச் சிக்கலில் இருந்து நாடு மீண்டெழ சர்வ கட்சி ஆட்சிதான் ஒரே வழி. அது உண்மையான சர்வகட்சி ஆட்சியாக இருக்க வேண்டும். சிறிலங்கா பொதுஜன முன்னணியின் ஆதிக்கத்தில் இருக்கின்ற சர்வகட்சி ஆட்சியாக அது இருக்கக் கூடாது."

சுமந்திரனின் மேற்படி கூற்றில் முதலாவது விடயம் – சர்வகட்சி ஆட்சியை அமைக்கும் விவகாரத்துக்கான வரவேற்பு – வரவேற்கத்தக்கது.

ஆனால், இரண்டாவது விடயம் – அந்த சர்வகட்சிக் கூட்டணி பொதுஜன முன்னணியின் ஆதிக்கத்தில் இருக்கக் கூடாது என்ற முன்நிபந்தனை – அவரது அவசரக் குடுக்கைத்தனத்தைக் காட்டுகின்றது.

ஏதோ தென்னிலங்கை அரசியல் விடயங்களுக்கு எல்லாம் தீர்ப்பளிக்கும் நீதிபதி பொறுப்பு தன்னிடம் அளிக்கப்பட்டிருப்பது போலவே இப்போதெல்லாம் வியாக்கியானம் கூறத் தலைப்பட்டிருக்கின்றார் அவர். அது அல்ல அவரது முதன்மையாக பொறுப்பு, கடப்பாடு, பணி. தென்னிலங்கையில் கட்டவிழும் அரசியல் நிலைப்பாடுகளை எப்படி தனது மக்களுக்கு – தமிழ் மக்களுக்கு – யாழ். மக்களுக்கு – சாதகமாக மாற்றுவது என்பதுதான் அவரின் பிரதான பொறுப்பும் கடமையுமாகும்.

அதைவிடுத்து, தென்னிலங்கை அரசியலுக்கு நீதி, நியாயம் உரைத்து, அதற்குத் தீர்ப்புச் சொல்லும் உச்சப் பட்ச அறிவு மட்டத்தில் பணியாற்ற வேண்டியவர்தாம் என்று அவர் கருதினால் அதற்குக் கொழும்பில் போயிருந்துதான் அவர் அரசியல் நடத்த வேண்டும். யாழ்ப்பாணத்தில் அல்ல.

சர்வகட்சி அரசு அமைய இடமளித்தால்தான், அதில் பொதுஜன பெரமுனவின் தலையீடு, ஆதிக்கம் பற்றிய விடயம் இரண்டாவதாக எழும்.

அந்த சர்வகட்சி அரசு அமைந்தால் அதன் மூலம் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் உடனடிப் பிரச்சினைத் தீர்வு காண என்ன வாய்ப்புண்டு, அதை எப்படி இலக்கு வைத்து எட்டுவது, காரிய சித்தியாக்குவது, இப்போதைய பொருளாதார நெருக்குவாரத்தில் இருந்து ஏற்கனவே மூன்று தசாப்தகாலப் போரினால் பாதிப்புற்ற வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு எப்படி மீட்சி பெற்றுக் கொடுக்கலாம், அதற்கான தந்திரோபாய வியூகங்கள் யாவை, தமிழ்த் தேசியப் பரிமாணங்களை விட்டுக் கொடுக்காமல் அதனை ஈட்டுவது எங்ஙனம், அப்படிச் செய்வதற்கு வாய்ப்புண்டா என்ற சாணக்கியங்கள்தான் இப்போது சிந்திக்கப்பட வேண்டும்.

அதைவிட்டு, தென்னிலங்கை அரசியல் நிகழ்வுகளுக்கு நீதி, நியாயத் தீர்ப்புகளை தம்மிஷ்டப்படி கூறிக்கொண்டு, அங்கு காற்றுபோன அரசியல் வண்டிகளில் ஏறி, தமிழர் எதிர்காலத்தையும் நட்டாற்றில் விட்டு, அரசியல் குழப்பம் செய்யும் போக்கை கூட்டமைப்பு – குறிப்பாக சுமந்திரன் – இத்துடன் நிறுத்த வேண்டும்.

திரும்பவும், அரசமைப்பை மீறி 'மக்கள் ஆணை' என்ற தத்துவத்தை தமது வாதத்துக்காக அவர் புரட்டிப் போட்டுப் பேசுகிறார். 2018இல் இதற்கு மாறாக, மக்களின் ஆணையை தூக்கிக் கடாசி, அரசமைப்பைக் காட்டி, ரணிலை ஆட்சியில் இருத்தியவரும் அவரேதான். இன்று அவர் கூறும் மக்கள் ஆணைக் கோட்பாடு சரி என்றால் அதை முதலில் 2018இல் மீறிய முதல் நபரே அவர்தான். அதைப் பற்றி இப்பத்தியில் விரிவாகப் பின்னர் பார்ப்போம்.

இப்போதைக்கு இந்த உத்தேச சர்வகட்சி அரசு என்ற நகர்வைத் தமிழ் மக்களுக்குச் சரியாகப் பயன்படுத்த என்ன செய்யலாம் என்று பாருங்கள்.

# அரசில் ராஜபக்ஷக்களின் மேலாதிக்கம்; மீண்டும் மக்கள் போராட்டம் வெடிக்கலாம்!

## பிட்ச் ரேட்டிங் சர்வதேச தரப்படுத்தல் நிறுவனம் எச்சரிக்கை

போராட்டக்காரர்களால் கவிழ்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராகப் பதவிவகித்தார்.

தற்போது நாடாளுமன்றமும் அரசாங்கமும் ராஜபக்ஷ குடும்பத்துடன் மிகநெருங்கிய தொடர்பைக்கொண்ட ஸ்ரீலங்கா மக்கள் சுதந்திரக்கூட்டணி அரசியல்வாதிகளின் மேலாதிக்கத்துக்கு உட்பட்டிருக்கின்றது.

இது தற்போதைய பொருளாதார நிலைவரத்தில் முன்னேற்றம் ஏற்படாவிட்டாலோ அல்லது மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புக்கள் மக்களின் எதிர்ப்பிற்குரியவையாக இருந்தாலோ மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடையக்கூடிய அச்சுறுத்தலைக் கொண்டிருக்கின்றது என்று சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனங்களில் ஒன்றான பிட்ச் ரேட்டிங் நிறுவனம் எச்சரித்திருக்கின்றது.

பெரும்பான்மை ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் புதிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டாலும் கூட, இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் கடன்களை மீளச்செலுத்தமுடியாத நிலை ஆகிய நெருக்கடிகளிலிருந்து மீள்வதில் இன்னுமும் அரசியல் ரீதியான அபாயத்துக்கு முகங்கொடுத்திருப்பதாக பிட்ச் ரேட்டிங் தரப்படுத்தல் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு காணப்படுவதுடன் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் சிலரும் அவரது அரசாங்கத்தில் இணைந்துகொண்டிருக்கின்றனர்.

இது நுண்பாகப் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடனுறுதிப்பாடு ஆகியவற்றை மீண்டும் நிலைநாட்டுவதற்கு அவசியமான கடினமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கும், பேச்சுகளை முன்னெடுப்பதற்கும் போதுமான ஆதரவு இருக்கின்றது என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவ்வாறான மறுசீரமைப்புக்கள் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதில் காணப்படக்கூடிய தடைகளை நீக்குவதற்கு உதவும் என்பதுடன், தற்போதைய சூழ்நிலையில் கடன்களை மீளச்செலுத்தமுடியாதவாறு இலங்கை முறிவடைவதைத் தடுப்பதற்கும் இன்றியமையாததாகும் என்று இலங்கை தொடர்பில் அந்நிறுவனம் வெளியிட்டுள்ள மதிப்பீட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் வலுவான ஆதரவு காணப்படினும், அதற்கான பொதுமக்களின் ஆதரவென்பது மிகக்குறைவானதாகவே காணப்படுவதாக பிட்ச் ரேட்டிங் தரப்படுத்தல் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

போராட்டக்காரர்களால் கவிழ்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராகப் பதவிவகித்தார். தற்போது நாடாளுமன்றமும் அரசாங்கமும் ராஜபக்ஷ குடும்பத்துடன் மிகநெருங்கிய தொடர்பைக்கொண்ட ஸ்ரீலங்கா மக்கள் சுதந்திரக்கூட்டணி அரசியல்வாதிகளின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றது.

இது தற்போதைய பொருளாதார நிலைவரத்தில் முன்னேற்றம் ஏற்படாவிட்டாலோ அல்லது மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புக்கள் மக்களின் எதிர்ப்பிற்குரியவையாக இருந்தாலோ மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடையக்கூடிய அச்சுறுத்தலைக் கொண்டிருக்கின்றது என்றும் பிட்ச் ரேட்டிங் தரப்படுத்தல் நிறுவனம் கரிசனை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சனத் நிஷாந்த போன்றோர்களுக்கு மக்கள் விரைவில் பாடம் புகட்டுவர்!

## ஹேஷா விதானகே எச்சரிக்கை



நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் கடந்த காலங்களில் நிகழ்த்தப்பட்ட சம்பவங்களிலிருந்து இன்னமும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.

ஜூலை 9 ஆம் திகதி போன்ற நாள் மீண்டும் வெகுவிரைவில் வரும். அப்போது தம் மீதான அழுத்தத்தைத் தாங்கமுடியாமல் தமது உயிரைப் பணயம்வைத்து முன்னேறிவரும் மக்களை எவராலும் தடுக்க இயலாது.

அதேபோன்று மக்களின் போராட்டத்தை வசைபாடிய சனத் நிஷாந்த போன்ற நபர்களுக்கு மக்கள் சரியான பாடத்தைப் புகட்டுவார்கள் என்று தெரிவித்தார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாடாளுமன்றத்தில் அவசரகாலநிலை பிரகடனத்துக்கு சார்பாக வாக்களித்தவர்கள் இந்நாட்டில் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைப்பதற்காகக் கைதூக்கியவர்களாவர். அதற்காக 120 பேர் வாக்களித்தனர்.

அதேவேளை நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் ஜனநாயகத்தையும் சீரழிக்கவேண்டாமென 63 பேர் வாக்களித்தனர். தற்போது இவ்விரு வாக்குகள் தொடர்பிலும் மக்களுக்கு சிறந்த புரிதல் இருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் சிரேஷ்ட அமைச்சர்கள் தாங்கள் இழுந்த விடயங்கள், தாம் முகங்கொடுத்த அசௌகரியங்கள், தனிப்பட்ட இழப்புக்கள், பொருளாதார அழிவுகள் பற்றியே உரையாற்றினர். அவர்கள் தமக்குரிய பொறுப்பை மறந்துவிட்டுப் பேசினார்கள்.

ஜனநாயக முறையின்படி நாடாளுமன்றத்துக்கு வந்தவர்கள், தாம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதை மறந்து செயற்பட்டதை நேரடியாகக் கண்டோம்.

தமது சொத்துக்கள் சேதமடையும்போது வேதனையுடன் நாடாளுமன்றத்தில் குரலை எழுப்பிய உறுப்பினர்களால் தற்போது மக்கள் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிகளையும் இன்னல்களையும் புரிந்துகொள்ள முடியவில்லை.

அத்தியாவசியப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்குக்கூட நீண்ட வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலையில் மக்கள் இருக்கின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் கடந்த காலங்களில் நிகழ்த்தப்பட்ட சம்பவங்களிலிருந்து இன்னமும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.

ஜூலை 9 ஆம் திகதி போன்ற நாள் மீண்டும் வெகுவிரைவில் வரும். அப்போது தம் மீதான அழுத்தத்தைத் தாங்கமுடியாமல் தமது உயிரைப் பணயம்வைத்து முன்னேறிவரும் மக்களை எவராலும் தடுக்க வியலாது. அதேபோன்று மக்களின் போராட்டத்தை வசைபாடிய சனத் நிஷாந்த போன்ற நபர்களுக்கு மக்கள் சரியான பாடத்தைப் புகட்டுவார்கள் என்று தெரிவித்தார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஜெனிவாவில் பாரிய நெருக்கடி இந்த முறை அரசுக்கு ஏற்படும்!

## இதுவரை காப்பாற்றிய பீரிஸ் ஆரூடம்



அவசரகாலச் சட்டம், ஜனநாயக உரிமை மீறல்கள், தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரின் போது விசேட கவனம் செலுத்தப்படும். கொள்கைக்கும்,கட்சியின் அரசமைப்பிற்கு முரணாகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தற்போது செயற்படுகிறது என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு அவசரகாலசட்டம்பாதிப்பைஏற்படுத்தும்என்றகாரணத்தால் அதற்கு எதிராக வாக்களித்தேன். தற்போதைய நிலையில் அவசரகால சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை கிடையாது.அவசரகால சட்டம் மனித உரிமைகளை கேள்விக்குள்ளாக்கும்.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின்கொள்கைக்கும், கட்சியின் அரசமைப்பிற்கு முரணாகவும் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுன தற்போது கொள்கையற்ற வகையில் செயற்படுகிறது. கட்சியின் கொள்கைக்கு முரணான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனநாயக ரீதியிலான மக்கள் போராட்டத்தை முடக்க அவசரகால சட்டத்தை அமுல்படுத்தினால், அதன் பெறுபேறு பாதகமானதாக அமையும். அவசரகாலச் சட்டம் அரசமைப்பைத் தவிர்த்து ஏனைய சகல சட்டங்களையும் கேள்விக்குள்ளாக்கும். மனித உரிமைக்கும் அவசரகால சட்டம் பாதிப்பை ஏற்படுத்தும்.

பொருளாதார ரீதியில் மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் சர்வதேசத்தின் உதவியை எதிர்பார்த்துள்ள போது அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளதால் சர்வதேசம் இலங்கை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தியுள்ளது. காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மேற்கொண்ட மிலேட்சத்தனமான தாக்குதலுக்கு முழு உலக நாடுகளும், மனித உரிமை அமைப்புக்களும் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறவுள்ள 51 ஆவது கூட்டத்தொடரின் போது இலங்கை பாரிய சவால்களை நிச்சயம் எதிர்கொள்ளும். ஜனநாயகத்துக்கு முரணான செயற்பாடுகள் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கலை ரத்து செய்யும் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. – என்றார்.

# மருந்துத் தட்டுப்பாட்டுக்கு ஒகஸ்ட் இறுதிக்குள் தீர்வு

## சுகாதார அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



நாட்டில் தற்போது நிலவும் மருந்துகளுக்கான தட்டுப்பாடு ஒகஸ்ட் மாதத்தில் நிறைவுக்கு வரும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அத்தோடு தற்போது பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் ஓரளவிற்குதீர்க்கப்பட்டுநாடுவழமைக்குதிரும்பிக்கொண்டிருப்பதாகவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மினுகோஷி ஹிதேகி மற்றும் யுனிசெவ் அமைப்பின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் கெஹலிய மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜப்பான் அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள 15 லட்சம் டொலர் பெறுமதியான மருந்துப் பொருள்களின் முதற்கட்ட தொகை ஜப்பான் தூதுவரால் சுகாதார அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது. இவ்வாறு கையளிக்கப்பட்டவற்றில் உயர் இரத்த அழுத்தம் , நீரிழிவு நோய், இதய நோய், சிறுநீரக நோய், கல்லீரல் நோய் உள்ளிட்டவற்றுக்காக வழங்கப்படும் மருந்துகள் உள்ளடங்குகின்றன.

குறிப்பாக கர்ப்பிணிகளுக்கான நீரிழிவு மற்றும் கல்சியம் என்பவையும் காணப்படுகின்றன. கையளிக்கப்பட்ட முதற்கட்ட மருந்து தொகையின் பெறுமதி ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 650 டொலர்களாகும்.

இவை யுனிசெவ் அமைப்பின் ஊடாக ஜப்பான் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் யுனிசெவ் அமைப்பின் இலங்கைக்கான உப பிரதிநிதி எம்மா பிரிங்கம் மற்றும் ஜப்பான் பிரதிநிதிகள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

உலகெங்கிலும் உள்ள அனைத்து நட்பு நாடுகளும் இலங்கை நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஆதரவளித்து வருகின்றன. அந்த நாடுகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளும் மிகவும் நட்பு ரீதியில் ஆதரவை வழங்கியுள்ளன எனவும் அவற்றுள் ஜப்பான் உயர்தர நட்புறவை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக கொவிட் நெருக்கடி காலத்திலும் தற்போதைய நெருக்கடி நிலையிலும் வழங்கப்படும் ஆதரவு மிகவும் முக்கியமானது என்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்று வரும் கலந்துரையாடல்கள் வெற்றிகரமானவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த வாரத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமானளவு அதிகரித்துள்ளதாகவும், அதற்கமைய எதிர்காலத்தில் அனைத்தும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இந்த சவால்களை எதிர்கொண்டு தனித்துவமான வெற்றியை அடைய முடியும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மருந்து நெருக்கடியின் போது, சுகாதாரத் துறையின் நிபுணர்களின் ஆலோசனையின்படி, கொடுக்கப்பட வேண்டிய முன்னுரிமைகள் வகைப்படுத்தப்பட்டு சரியான முறையில் கையாளப்பட்டன.

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு முன்னுரிமை அளித்து, அவசர சிகிச்சைகள் மற்றும் உபகரணங்களை சுயமாக நிர்வகித்து, அவசரமற்ற அறுவைச் சிகிச்சைகளுக்கு வேறு திகதியை வழங்கி சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யப்பட்டமை முக்கியமானது என சுகாதார அமைச்சர் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார். அத்தோடு நாட்டில் திரிபோஷா திட்டத்தை மீண்டும் தொடங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ‘ஆரோக்கியத்தின் பாதையில்’ விழிப்புணர்வு ஈருருளிப் பயணம் திங்கள் காலை 7 மணிக்கு!

யாழ்ஆரோக்கியநகரத்திட்டத்தால்முன்னெடுக்கப்படவுள்ள ஈருருளிப் பயணம் நாளை (திங்கட்கிழமை) காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ள இந்த ஈருருளிப் பயணம் அங்கிருந்து ஆடியபாதம் வீதி வழியாகக் கொக்குவில் சந்தியை அடைந்து, அங்கிருந்து கே.கே.எஸ். வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து, அந்த வீதி வழியாக வேம்படிச் சந்தியை வந்தடையும். அங்கிருந்து பலாலி வீதி ஊடாகப் பரமேஸ்வராச் சந்தியை அடைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் நுழைவாயிலில் நிறைவடையவுள்ளது.

அண்ணளவாக 10 கிலோ மீற்றர் தூரமுள்ள இந்த விழிப்புணர்வு ஈருருளிப் பேரணியில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன், யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், ஆணையாளர் இ.த. ஜெயசீலன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்திசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சா. சுதர்சன், நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்குபற்றலுடன், பல்கலைக்கழகப் பணியாளர்கள், மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்படப் பெருமளவானோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பொதுமக்களிடையே சுகநலனில் அக்கறை கொள்ளலில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் ‘யாழ் ஆரோக்கிய நகரம்’ என்ற செயற்திட்டத்தின் கீழ் இந்த விழிப்புணர்வு ஈருருளிப் பயணம் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

உலக நாடுகள் பலவற்றில் உலக வங்கி ‘ஆரோக்கிய நகரங்கள்’ என்ற எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தி கணிசமான ஆரோக்கிய நகரங்களை அடையாளப்படுத்தியும் உள்ளது. அந்த அடிப்படையில் தென் ஆசியாவிலேயே முதன் முறையாக யாழ்ப்பாண நகரம் தெரிவுசெய்யப்பட்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின், சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறையின் நேரடி ஒருங்கிணைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலில் உலக சுகாதார ஸ்தாபனம் , யாழ். மாநகர சபை, யுனிசெவ், சுகாதார சேவைகள் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை, கல்வி அமைச்சு, அரச – அரச சார்பற்ற நிறுவனங்கள், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் இந்தத் திட்டத்தின் பங்காளிகளாகத் தமது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கவே ஜனாதிபதி ரணில் முன்னுரிமை அளிக்கவேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 31

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உரியவாறான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னுரிமை வழங்கவேண்டுமே தவிர, தமது உரிமைகளைக்கோரிப் போராட்டங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதில் அவதானம் செலுத்தக்கூடாது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி வலியுறுத்தியுள்ளார்.

பாரிய பொருளாதார நெருக்கடியின் விளைவாகக் கடந்த சில மாதங்களாக நாட்டுமக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக அரசாங்கத்துக்கு எதிராக வெடித்த மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தின் விளைவாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதுடன், நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் போராட்டத்தில் முன்னரங்கில் நின்று இயங்கிய செயற்பாட்டாளர்கள் பலர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுவரும் நிலையில், இதுதொடர்பாகத் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மீனாக்ஷி கங்குலி மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

தற்போது நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு பொருளாதார, அரசியல் மற்றும் சமூக ரீதியான நீதியை வழங்குவதில் விசேடமாகக் கவனம் செலுத்தவேண்டுமே தவிர, தமது உரிமைகளை வலியுறுத்திப் போராடியவர்களைத் தண்டிப்பதில் அவதானம் செலுத்தக்கூடாது. போர்க்குற்றங்கள் மற்றும் ஊழல்மோசடிகளுடன் தொடர்புடைய குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறச்செய்வதே முன்னுரிமைக்குரிய விடயமாகும். – என்று அவர் அந்தப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வீட்டுத்தோட்டத்தில் நோய் பீடைத்தாக்கத்தை கட்டுப்படுத்தல்

வீட்டுத்தோட்டம் என்பது நாம் வசிக்கின்ற வீட்டைச் சுற்றியுள்ள நிலத்தில் எமக்கு கிடைக்கின்ற வளங்களை பயன்படுத்தி எமக்கு வேண்டிய உணவு வகைகளை உற்பத்திசெய்யும்தோட்டம். இதன்பிரதான நோக்கங்களில் ஒன்று நஞ்சற்ற உணவு வகைகளை பெறுதல். நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்வதற்கு பின்வரும் இயற்கை முறை பூச்சிக் கொல்லிகள், பூச்சி விரட்டிகள் மற்றும் இயற்கை பங்கசு நாசினிகள் என்பவற்றை பாவிக்கலாம். இவை பீடைகளை விரட்டக் கூடிய, வெறுப்பூட்டக்கூடிய அல்லது குடித்தொகையைக் குறைக்கக் கூடிய தாவரப் பகுதிகளைக் கொண்டு பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் இயற்கை நாசினிகள்.

இவற்றை பாவிப்பதில் உள்ள நன்மைகள்

செலவு குறைந்தவை
இலவசமானவை
இலகுவில் கிடைப்பவை
எப்பொழுதும் கிடைப்பவை
பக்கவிளைவுகளை ஏற்படுத்தாதவை
கையாளும் போது அபாயம் அற்றவை
சூழலுக்கு தீங்கு விளைவிக்காதவை
நன்மை செய்யும் பூச்சிகளுக்கு பாதுகாப்பானது
விலங்குகளுக்கு பாதிப்பு அற்றவை
தெளிப்பதற்கு தெளிகருவி தேவையில்லை
பல தாவர நாசினிகளை கலந்து விசிறினாலும் பயிர்களுக்கு பாதிப்பு அற்றது.

**இயற்கை முறை பூச்சிக் கொல்லிகள்**

1. சோற்றுக்கரைசல்
2. துளசிச்சாறு அல்லது கருவாட்டுப் பொறி

இவற்றை பூச்சிகளை அவதானித்தபின் பயன்படுத்துதல் நன்று.

**பூச்சி விரட்டிகள்**

1. வேப்பிலைக் கரைசல் அல்லது நொச்சிக் கரைசல்
2. 3G கரைசல்
3. ஐந்திலைக் கரைசல்
4. வேப்பம் விதைக்கரைசல்
5. மாட்டுச்சலம்
6. புகையிலைச்சாறு
7. அடுப்புச் சாம்பல்

இவற்றை பூச்சிகளை அவதானிக்க முன் குறித்த இடைவெளியில் பயன்படுத்துதல் நன்று.

**இயற்கை பங்கசு நாசினிகள்**

1. மஞ்சள் வேப்பெண்ணைக் கரைசல்
2. மஞ்சள் தூள்
3. அப்பச் சோடா
4. கற்றாளைக் கரைசல்

சோற்றுக்கரைசல் - 500 கிராம் வெள்ளைச்சோற்றை 5 லீற்றர் நீரில் 10 நாள்கள் காற்றின்றிய நிலையில் நொதிக்க விடுதல் வேண்டும். 11 வது நாள் கரைசலை வடித்து பயிருக்கு தெளிக்கலாம். (ஐதாக்க கூடாது)

கட்டுப்படுத்தும் பூச்சிகள் - அழுக்கணவன், ஏப்பிட்டு எறும்பு

**துளசிச்சாறு அல்லது கருவாட்டுப் பொறி**

இது பழ ஈக்களை கட்டுப்படுத்தும். மா, கொய்யா, சீத்தா பழம், போன்ற பழ ஈக்கள் தாக்கும் மரங்களுக்கு பூக்கும் பருவத்தில் பயன்படுத்த வேண்டும்.

துளசிச் சாறு பொறி - துளசி இலைகளை எடுத்து தேவையான அளவு நீர் விட்டு கூழ் போன்று அரைத்தல் வேண்டும். பின் அரை லீற்றர் அல்லது ஒரு லீற்றர் வெறுமையான போத்தலை எடுத்து மேல் பகுதியில் விரல் நுளையக் கூடிய அளவு துளை இட்டு மரத்தில் தொங்க விடவேண்டும். இது ஆண் பழ ஈ பூச்சிகளை கவரும்.



கருவாட்டுப்பொறி - மேற்கூறப்பட்டவாறு போத்தலை தயார் செய்து கால் பங்கிற்கு நீர் ஊற்றி இரண்டு துண்டு கருவாட்டுத் துண்டுகளை இட்டு கட்டித் தொங்க விடவேண்டும். இது பெண் பழ ஈ பூச்சிகளை கவரும்.

**வேப்பிலைக் கரைசல் அல்லது நொச்சிக் கரைசல்**

1 கிலோ வேப்பிலை அல்லது 1 கிலோ நொச்சி இலையை எடுத்து 5 லீற்றர் நீரில் அவித்து ஒரு இரவு





ஆற வைத்து சூடு ஆறிய நிலையில் மாலை வேளையில் விசிறலாம்.

வேப்பிலைக் கரைசல் கட்டுப்படுத்தப்படும் பீடைகள் - இலையரிப்புழுக்கள், இலையான்கள், வண்டுகள்

நெச்சிக்கரைசல் கரைசல் கட்டுப்படுத்தப்படும் பீடைகள்:- கோவா டைமன் முதுகு அந்து, அழுக்கணவன், சிவப்பு பூசணி வண்டு, வெட்டுக்கிளி.

**3G கரைசல்**




500 கிராம் உள்ளி, 250 கிராம் இஞ்சி, 250 கிராம் பச்சை மிளகாய் ஆகியவற்றை எடுத்து நன்கு பசை போல அரைத்துக் கொள்ள வேண்டும். இதில் 20 அல்லது 30 மி.லீ. ஐ எடுத்து ஒரு லீற்றர் நீரில் கரைத்து பயிர்களுக்கு தெளிக்கலாம்.

கட்டுப்படுத்தும் பீடைகள்: பனிப்பூச்சி, அறக்கொட்டியான், வெண் ஈ, வண்டுகள், சிற்றுண்ணிகள், மற்றும் அழுக்கணவன்

**ஐந்திலைக் கரைசல்**

ஐந்திலைக்கரைசல் தயாரிப்பதற்கு தாவரங்களை தெரிவு செய்யும் போது பின்வரும் இயல்புகள் இருத்தல் வேண்டும்.

1. கசப்புத்தன்மை உடைய தாவரம் - வேம்பு, சீந்தில், சிறியாநங்கை
2. மணமுடைய தாவரங்கள் - நொச்சி, துளசி
3. கால்நடை மேயாத தாவரம் - ஆடாதோடை, காட்டாமணக்கு
4. பூச்சி நோய் தாக்காத தாவரம் - ஆமணக்கு மஞ்சமுனா
5. பால்வரக்கூடிய தாவரம் - எருக்கலை

ஒவ்வொர வகை இயல்புள்ள இலைகளிலும் 01 கிலோகிராம் எடுத்து, பெறப்பட்ட 05 கிலோகிராம் இலைகளையும் உரலில் இட்டு இடிக்க வேண்டும். இடித்த இலைகளை பிளாஸ்டிக் அல்லது மண் பாத்தியில் இட்ட பின் 1 லீற்றர் சாணிக்கரைசலை ஊற்ற வேண்டும் பின் 100 கிராம் பெரங்காயத்தாளை இட்டு நன்றாக கலக்கிய பின் 10 லீற்றர் நிரை ஊற்ற வேண்டும். இதன் பின் நன்றாக கலக்கிய பின் பானை வாயை இறுக்கமாக மூடிக்கட்ட வேண்டும். பின் தினசரி காலை மாலை கரைசலை கலக்க வேண்டும். ஒருவாரத்தின் பின் கரைசலைப் பயன்படுத்தலாம்.

விசிறும் முறை - கரைசலில் 0.5 லீற்றரை 9.5 லீற்றருடன் கலந்து மாலை வேளைகளில் விசிறலாம்.

கட்டுப்படுத்தப்படும் பீடைகள் - இலையரிப்புழுக்கள், இலையான்கள், வண்டுகள், அறக்கொட்டியான், சிற்றுண்ணிகள்

**வேப்பம் விதைக்கரைசல்**

50 கிராம் விதையை மாவாக்கி 1 லீற்றர் நீரில் கலந்து இரவு முழுவதும் ஊற வைத்தல் வேண்டும், மறுநாள் வடித்து 4 மடங்கு நீர் சேர்த்து விசிறலாம்.

கட்டுப்படுத்தப்படும் பீடைகள் - இலையரிப்புழுக்கள், இலையான்கள், வண்டுகள்

**மாட்டுச்சலம்**

மாட்டுச்சலத்தை சேகரித்து பாத்திரத்தில் மூடி 2 கிழமைகள் நொதிக்க வைத்தல் வேண்டும். பின் 2 பங்கு நீருடன் கலந்து விசிறலாம்.

கட்டுப்படுத்தும் பீடைகள் - வெண்மூட்டுப்பூச்சி, வெட்டுப்புழுக்கள், அழுக்கணவன், பனிப்பூச்சி, சிற்றுண்ணிகள்

**புகையிலைச்சாறு**

புகையிலை காம்புகளைச் சேகரித்து நீரில் ஒரு இரவு ஊறவைத்தல் வேண்டும். பின் கொதிக்கவைத்து ஆறிய பின் வடித்து பயிர்களுக்கு விசிறலாம்.

கட்டுப்படுத்தும் பீடைகள் - வெட்டுப்புழுக்கள், வெண் ஈக்கள்

**அடுப்புச் சாம்பல்**

அடுப்புச்சாம்பலை ஆறவிட்டு அரித்து தூவலாம்.

கட்டுப்படுத்தும் பீடைகள் - அழுக்கணவன், ஆனைப் பேன்

**மஞ்சள் வேப்பெண்ணைக் கரைசல்**

5 மி.லீ. வேப்பெண்ணை, 50 கிராம் மஞ்சள் மற்றும் 5 கிராம் சவற்கார துண்டையும் 5 லீற்றர் நீரில் நன்கு கலந்து தாவரங்களுக்கு தெளிக்கலாம். எல்லா விதமான பூஞ்சண நோய்களையும் கட்டுப்படுத்தும்

உதாரணமாக இலைப்புள்ளி நோய், கீழ் பூஞ்சணம், மேல் பூஞ்சணம் போன்றவை.

**மஞ்சள் தூள்**

1 மேசைக்கரண்டி மஞ்சள் தூளை 1 லீற்றர் நீரில் நன்கு கலந்து மேல் பூஞ்சண நோய் மற்றும் இலைப்புள்ளிகளுக்கு தெளிக்கலாம். தாக்கம் அதிகமாக இருக்கும் போது 5 பல்லு உள்ளியை இடித்து அதனுடன் 5 மில்லி லீற்றர் வேப்பெண்ணையையும் சேர்த்தால் விரைவாக பூஞ்சண நேயைக் கட்டுப்படுத்தும்.

மஞ்சள் தூளை தவரப்பகுதியை சுற்றி போடுவதன் மூலம் எறும்புத் தாக்கத்தையும் கட்டுப்படுத்தலாம். தாவரப்பகுதியில் வெட்டுப்பட்ட பகுதிக்கு அல்லது தாவரங்களை கத்தரித்த பின், மஞ்சள்தூளை நீர் விட்டு பசையாக்கிய பின் பூசலாம். இது கீழ்பக்கமாக இறத்தல் எனும் பங்கஸ் நோய் வராமல் தடுக்கும்.

ஒரு கிழமைக்கு ஒரு தடவை 1 மேசைக்கரண்டி மஞ்சள் தூளை 1 லீற்றர் நீரில் கலந்து தெளித்து வந்தால் பூஞ்சண நோய்கள் வராமல் தடுக்கலாம்.

**அப்பச் சோடா**

1 மேசைக் கரண்டி அப்பச் சோடா, 1 தே.கரண்டி வேப்பெண்ணை, மற்றும் 1 தே.கரண்டி திரவ சவற்காரம் என்பவற்றை எடுத்து 1 லீற்றர் நீரில் நன்கு கலந்து 1 கிழமை இடைவெளியில் தெளித்தால் பின்வரும் பங்கஸ் நோய்கள் மற்றும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

பங்கஸ் நோய்கள்: மண் பூஞ்சணம், மேல் பூஞ்சணம். ரோஜாவில் ஏற்படும் கறுப்பு புள்ளி பங்கஸ், துருநோய்

பூச்சிப் பீடைகள்: அழுக்கணவன், பனிப் பூச்சி, வெண் ஈ, புளுக்கள், மயிர்க்கொட்டிகள், இலைச் சுரங்கமாக்கி

அப்ப சோடாத் தூளை தவரப்பகுதியை சுற்றி போடுவதன் மூலம் நத்தைத் தாக்கத்தையும் கட்டுப்படுத்தலாம்.

**கற்றாளைக் கரைசல்**

கற்றாளை, பப்பாசிப் பழம், கடதாசிப் பூ என்பவற்றை 500 கிராம் அளவில் எடுத்து நன்கு இடித்து இதனுடன் 500 கிராம் மஞ்சள் தூளை கலந்து பின் அவித்து ஆற விட்டு வடித்து சாற்றை பெற்றுக் கொள்ள வேண்டும். பெறப்பட்ட சாற்றிலிருந்து 10 மி.லீ. ஐ 1 லீற்றர் நீரில் கலந்து 1 கிழமை இடைவெளியில் தாவரங்களுக்கு தெளித்து வந்தால் பூஞ்சண நோய்கள் வராது பாதுகாக்கலாம்.

அனைத்துக் கரைசல்களையும் தயாரித்து உடனே பயன்படுத்த வேண்டும் என்பதல்ல தேவைக்கேற்ப பயன்படுத்தலாம். பொதுவாக தாவரங்கள் நடுகை செய்து ஒரு கிழமையின் பின்னர் பயன்படுத்துதல் நன்று. 5 வகையான பூச்சி விரட்டிகள், அப்பச் சோடா, மஞ்சள் தூள் என்பவற்றை மேற்கூறப்பட்ட முறைகளில் தயாரித்து 1 கிழமை இடைவெளியில் மாறி மாறி பயன்படுத்தினால் பூச்சிகள், நோய்கள் அற்ற பயிரை வீட்டுத் தோட்டத்தில் விளைவிக்கமுடியும் என்பதில் ஐயமில்லை.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 31st of July 2022


We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

## READ AND ENJOY THE POEMS

## POOR JOEY

*- Teresa Lane -*



Joey is a performing dog
He does lots of tricks .
He leads the dogs around the ring
And his trainer's face he licks .

Whenever he enters the sawdust ring
All the children cheer,
Horay ! Hooray ! Hooray ! they cry,
Little Joey is here.

But when he goes behind the stage ,
And didn't do a trick right,
His nasty trainer beats him
And Joey cries all night.

## THE SCARECROW

I feel sorry for him.
Don't you?
Standing there in the sun
And the rain
He always has
A look of pain
What does he think about?
I don't know..
Do you..?



I watched a farmer
Set him up
With broom and rags
And bits of straw.
A scarecrow's clothes
Are never nice.
His face is ugly.
And that is why
The birds all fly
From the fields of rice.
But standing there
In the sun and the rain
With ragged clothes
And his look of pain
He really is
The farmer's friend
Saving his rice
From greedy birds
And hungry mice.

- Alfreda de Silva -

## Song of the Wagon Driver

My first love was the ten-ton truck
They gave me when I started ,
And though she played the bitch with me
I grieved when we parted.

Since then I've had a dozen more,
The wound was quick to heal,
And now it's easier to say
I'm married to my wheel

I've trunk end it north ,I' ve trunked it south,
On wagons good and bad,
But none was ever really like
The first I ever had .

The life is hard, the hours are long.
Sometimes I cease to feel,
But I go on, it seems to me
I'm married to my wheel.

Often I think of my home and kids,
Out on the road at night,
And think of taking a local job,
Provided the mone is right.

Two nights a week I see my wife,
And eat a decent meal,
But otherwise, for all my life ,
I'm married to my wheel.



### *Read this poem and answer the questions*

1. Who is the speaker in the poem?
2. How heavy was his vehicle?
3. Was that vehicle trouble free?
4. Did he hate it ?
5. How many more vehicles did he use?
6. What does the speaker think about the first vehicle?
7. Was his life easy and full of joy?
8. Why does he think of taking a local job?
9. Does his wife cook well for the speaker?
10. What line suggests his life is risky?



## MY MOTHER COMBS MY HAIR

*- Chitra Banerjee Divakaruni -*

The room is full
Of the scent of crushed hibiscus.
my mother's breath.
Our positions are of childhood,
I kneeling on the floor,
She cross legged
On the chair behind
She works the comb
through permed strands
rough as dry sea weed.
I can read regrets in her fingers
untangling snarls
rubbing red 'jabs kusum ' oil
Into brittle ends

When she was my age
her hair reached her knees
fell in a thick black lush
beyond the edges
of old photographs . In one
my father has daringly
covered her hand with his
and made her smile.
At their marriage ,she told me,
because of her hair
he did not ask for a dowry

**Intelectuals solve problems, Geniuses prevent them - Albert Einstein**

# 44TH FIDE CHESS OLYMPIAD INAUGURATED IN CHENNAI, INDIA




**Chess Event Coverage**

The 44th FIDE Chess Olympiad was inaugurated on July 28 at the Nehru Indoor Stadium in Chennai with fanfare, in the presence of Narendra Modi, the prime minister of India, and M.K. Stalin, the chief minister of the state of Tamilnadu, the main initiator of the event. The evening witnessed a march-past of the participating teams and was a sound and music spectacle to behold.

A total of 187 teams in the open section will vie for the Hamilton-Russell Cup, and 162 teams in the women's section for the Vera Menchik Cup, while the best combined results of a nation in both the sections will decide the winner of







the Nona Gaprindashvili Trophy.

The 44th FIDE Chess Olympiad and Women's Chess Olympiad are over-the-board team events. National chess federations compete in classical games for gold medals, trophies, and the title of strongest chess nation in the world. The event consists of an 11-round Swiss tournament; each player from a national team plays against another player from the opposing national team. Teams receive "game points" for winning or drawing games and "match points" for winning or drawing a match. Teams with the most match points for each section become the champions of their section, with a third award going for the team with the most points from both sections combined.

Participation - All Entered Minus One:

The open section of the Olympiad will feature a total of 187 teams, with the USA, India-1, and Norway as the top three seeds. The number of teams participating in the open section was lessened by one when Pakistan pulled out from the competition at the last minute, even after their team traveled all the way from Pakistan and reached Mahabalipuram itself. Earlier, a Facebook post by Amer Karim, captain of the team, had confirmed their arrival in India:

In a press release, the Ministry of Foreign Affairs of Pakistan criticized India for "[choosing] to politicize this prestigious international sporting event by passing the torch relay of this event through [Kashmir]," referring to the torch passing through Srinagar, the capital of the union territory of Jammu and Kashmir, on June 21. The spokesperson of the Indian External Affairs Ministry in return criticized Pakistan for "politicizing a prestigious international event."

The territory of Kashmir has been a flashpoint between the two neighboring countries and cause for three major wars and several armed skirmishes in the past eight decades.

This last-minute pullout has also resulted in an awkward situation for the host, as India fielded its third team to balance the odd number of entries at the beginning of July, after the expiration of the final deadline of registration on June 27. After Pakistan's withdrawal, the total number of entries has once again become an odd number, with the first round of the tournament scheduled for July 28.

The women's section will feature a total of 162 teams, with India-1, Ukraine, and Georgia as the top three seeds.

All Roads Lead To Mahabalipuram:

As I drive from the city of Chennai to the historical city of Mahabalipuram (or "Mamallapuram" as it was anciently known) through the East Coast Road, which starts at the south-eastern edge of Chennai, the impressive preparations for the Olympiad are evident. Every hundred meters there is a policeman for security, to watch over the smooth flow of traffic—apparently a total of more than 4,000 police personnel are deputed at Mahabalipuram itself, as I later find from police officials present at the venue. There are several billboards and wall paintings along the way welcoming the participants and highlighting the event.

In fact, the blitzkrieg of promoting the Olympiad has been in full swing in the city and elsewhere for months now. The most attractive



of the spectacles has been the transformation of the iconic Napier Bridge of Chennai:

The location is featured mainly in the promotional song produced by the Tamilnadu Government, composed by Oscar Award winner and music composer A.R.Rahman with appearances by many of the Indian players:

The mascot Thambi (a Tamil word meaning '"younger brother") is a perpetual presence all over the city, with the slogan Namma Chennai, Namma Chess ('This is our Chennai, our Chess').

The Government Hand

How did the state of Tamilnadu manage to pull off this miracle of successfully preparing for the Olympiad in just four months? "Whatever we touched became gold!" gushed Bharat Singh Chauhan, the secretary of the All India Chess Federation (AICF) at the initial press conference, crediting M.K. Stalin solely for bringing the event to Mahabalipuram. He had earlier confessed that the chief minister had approved the plan to host the Olympiad in Tamilnadu in just a day's time, with GM Srinath Narayanan being instrumental in reaching the proposal to his office through bureaucrats of the state government.

GM Srinath Narayanan at the press conference. Photo: Stev Bonhage/FIDE.

Stalin approved an initial budget of about ten million U.S. dollars (750,000,000 Indian rupees at that time, approximately) for the event, which has gone up to more than 13.3 million dollars (1,000,000,000 INR) by now, apart from the publicity expenditure by the government and the subsidy for traveling to Chennai provided to many of the teams by the FIDE and the organizers of the Olympiad, confessed Chauhan.

Mahabalipuram, situated at a distance of



about 40 miles from Chennai, is a UNESCO heritage site with beaches and resorts. The state government blocked about 1800 rooms in the vicinity of the town to host the Olympiad, apart from notifying many of its staff from various departments, to organize the event. Thus, the volunteers and government staff formed a massive workforce for the Olympiad at the airport, hotels, and venue. Expectantly, it resulted in happy feedback from many of the participants when they actually arrived in Chennai:

The glittering inauguration function was held in the city of Chennai, attended by Tamil film stars, politicians, media, and other prominent citizens of the city.

The concluding part of the Inauguration Ceremony, as Prime Minister Narendra Modi receives the Olympiad Torch from Praggnanandhaa and Gukesh. Photo: Lennart Ootes/FIDE.

**Finally, The Chess Part**

Leading up to the Olympiad, a rapid tournament was organized in the main hall of the event, in which a total of 1,414 participated, with all the games from 707 boards transmitted live, creating a record of a sort. The event was won by GM Vishnu Prasanna with a perfect score of 9/9, taking home the first prize of INR 35,000 (US $440 approximately) out of a total prize fund of INR 500,000, about $6,300.

Chesskid.com conducted a pre-Olympiad event with GM Viswanathan Anand and GM Akash Ganesan sharing their wisdom with selected youngsters.











# EAUDITORIUM OF THE FACULTY OF GRADUATE STUDIES

## At 04:00 PM on the 27th of July 2022.

Prof. S. Srisatkunarajah, Professor in Mathematics and Vice Chancellor of the University of Jaffna was the Chief Guest. Rt. Rev. Dr. Justin B. Gnanapragasam, Bishop of Jaffna, Rt. Rev. Dr. F.L. Emmanuel Fernando, Bishop of Mannar, Rt. Rev. Dr. Noel Emmanuel, Bishop of Trincomalee and Rev. Bishop Dr. S. Jebanesan, Retired Bishop of the Church of South India, were the guests of honour. The launching events were coordinated by Prof. S. Kannathasan, Professor in Parasitology and Dean of the Faculty of Graduate Studies.

The former Vice Chancellors of the University of Jaffna, Prof. P. Balasuntharampillai and Prof. N. Shanmugalingan, and the former Head of the Department of Christian Civilization, Prof. S. Sivalingarajah were also participated in the event as special guests.

Prof. S. Kannathasan in his address welcomed all those present and expressed his contentment as Dean of the Faculty of Graduate Studies in inaugurating the degree programme for the First Batch. The guests of honour and the special guests expressed their satisfaction regarding the commencement of the new degree programme, which is going to be conducted in Tamil medium, as a service to the local society by the University of Jaffna and extended their blessings and continued support. The Chief Guest Prof. S. Srisatkunarajah in his address accentuated the need of the programme for the transformation of the contemporary society and the necessity to bring religion to the cognitive level in order to remove all its poignant issues. Rev. Dr. J.C. Paul Rohan, the academic coordinator of the programme, in his address narrated how the proposal for the new degree programme originated, got shaped and has now become a reality and mentioned the contribution of all who co-toiled in the project. The Student Handbook for the First Batch was also released by him. Mr. S. Branavan, Assistant Registrar of the Faculty of Graduate Studies proposed the vote of thanks.

The 'Master of Christian Studies' abbreviated as 'MChrSt', aligns with the Sri Lanka Qualifications Framework (SLQF-2015) and meets the requirements for Level 9, that is, 'Masters by Course Work'. It is a self-financed academic programme. The duration of the programme is one academic year with two semesters, which will be conducted over a period of twelve months during the weekends. The medium of the programme will be both Tamil and English. Altogether 34 credits are allocated consisting of 28 credits for course work and 06 credits for a research project.

The 'Master of Christian Studies' degree programme is another venture achieved by the University of Jaffna. It is of a great value as this is the first - second cycle (according to the international nomenclature) taught course in Tamil medium offered for the first time in Sri Lanka. Hence, it is a golden opportunity to those who wish to pursue higher studies in the area of Christian Studies in Tamil. The University of Jaffna is proud to be an instrument in offering this opportunity. It always fulfils the legal aspirations of the local community where it is located by continuously opening avenues for various study programmes. In this line, the 'Master of Christian Studies' is another outlet to serve the need of those who want to go for a higher-level of learning and to obtain a postgraduate degree in Christian studies.

This degree programme was initiated and designed by the Department of Christian Civilization of the University of Jaffna. However, since it is a postgraduate degree programme, it is administered by the Faculty of Graduate Studies of the University of Jaffna.

Every year students from the Department of Christian and Islamic Civilizations of the University of Jaffna, students from the Christianity Unit of the Eastern University and from other institutes affiliated to foreign universities, pass out with bachelor degrees in the fields related to Christianity. As these graduates studied in Tamil medium, there is a bereft of opportunity for them to follow a postgraduate degree, as no University in Sri Lanka offers a postgraduate degree programme related to Christian studies in Tamil medium. The beneficiaries of the degree programme are Tamil graduates from various parts of the country. Thus, conducting this degree programme in the University of Jaffna is relevant and justified. Further this programme would also help those who are already employed in the relevant field to go for promotion and increment, and motivate some graduates to continue their research up to PhD.

In the Post-War situation of the country, where the promotion of ethnic and religious harmony and cohesion is urgently needed, the aim of this academic programme is to convince the candidates to appreciate the pluralistic nature of the country, to possess a comparative knowledge of religions, to interact amicably with the people of other faiths, and work towards forming a harmonious society. The graduates who successfully complete the programme will be competent and skilled for careers in religious, humanitarian and social entrepreneurship outlets related to justice, peace, human rights, education, counselling and wellbeing. Thus the mandate of this degree programme is to deepen the necessary knowledge in the fields of Christian studies, to develop skills necessary for entrepreneurship, employment and promotion, to have a Weltanschauung of contemporary global challenges and social evils, and to inculcate attitudes to respond to current local and global needs.








# வன்னித் தமிழன் மாவீரன் பண்டாரவன்னியன்



இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணத்தையும், தெற்கே அருவியாறு, நுவரெலியா மாவட்டம் போன்றவற்றையும், மேற்கே மாந்தை, மன்னார் போன்ற மாவட்டங்களையும், கிழக்கே திருகோணமலையையும் கொண்டதாக பரந்து விரிந்த வீரம்செறிந்த நீண்ட காலத் தொன்மையுடைய நிலம் வன்னிநிலம்.

இத்தனை பெருமைகளையும், இத்தனை தத்துவங்களையும் கொண்ட வன்னி நிலத்தினுடைய தனித்துவம் நிலைத்திருக்க வன்னியர் என்கின்ற இனக்குழுமம் கரணியம் எனப் பல நூல்கள் கூறுகின்றன. அந்த வன்னி நில வீரத்தின் சாட்சியாய், வன்னிநிலமக்கள் மாண்பின் சாட்சியாய், வன்னியை ஆண்ட கடைசி மன்னன் என்னும் புகழோடு பண்டாரவன்னியன் பற்றி தடம் தேடுவோம்.

யாழ்ப்பாண வைபவமாலை நூலாதாரங்கள் அடிப்படையில் ஒப்பிடுகையில் வட இலங்கையில் முல்லைத்தீவில் பிறந்து வளர்ந்தவர் பண்டாரவன்னியன். இவரது முழுப்பெயர் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் என்பதும் தன் முன்னோர் ஆண்டுவந்த வன்னி இராச்சியத்தை ஆண்ட ஒரு சிற்றரசர் என்பதும் தெளிவாகிறது. சோழப்பேரரசுகளால் சோழநாட்டிலிருந்து ஈழநாட்டையாள அனுப்பப்பட்ட வன்னிக்குலத் தளபதியின் வழித்தோன்றல் பண்டாரவன்னியன் என்பது யாழ்ப்பாண வைபவமாலையின் கருத்தாகும். இலங்கைக்குப் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற அந்நியர்கள் வரவுக்கு முன்னர் செழித்திருந்த வன்னி இராச்சியத்தின் கடைசி மன்னன் பண்டாரவன்னியன் எனக் கூறலாம்.

1605 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியம், கண்டி இராச்சியம் என அனைத்தையும் கைப்பற்றி ஆட்சி செய்த போதிலும் அவர்களின் ஆட்சி முடியும்வரை அவர்களால் வன்னி இராச்சியத்தை கைப்பற்றமுடியவில்லை என்பதுதான் பண்டாரவன்னியனின் ஆளுமையின் சாட்சியாகும். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலத்தில் கோட்டை இராச்சியம், கண்டி இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் என மூன்று இராச்சியங்கள் இருந்தன என்பது இன்றைய இலங்கைப் பாடத்திட்டங்கள் உட்பட பல நூல்களும் கூறுகின்றன. ஆனால் அதே போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தது பற்றியதான ஆரம்ப கால ஆவணங்களிலும் மூன்று இராச்சியங்கள் பற்றி பெரிதாக கூறப்பட்டுள்ளன.

போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் மூன்றாக பிரிக்கப்பட்டிருந்த இலங்கைத் தீவு போர்த்துக்கேயர்களின் மத்திய காலம், பிற்காலம் மற்றும் ஒல்லாந்தருடைய முழுவரலாற்றுக் காலத்திலும் பல்வேறு ஆவணங்கள் வன்னிஇராச்சியம் பற்றி மிக முக்கியமான ஒரு தடத்தை பதித்து வைத்திருக்கிறது. போர்த்துக்கேயர் தொடர்ச்சியாக இலங்கையை ஆளத்துடித்த அல்லது ஆண்ட ஒல்லாந்தர்கள், போர்த்துக்கேயர் போலவே இலங்கையைக் கைப்பற்ற எண்ணிய போது ஆரம்ப காலங்களில் அவர்களின் தலைவலியாக கண்டி இராச்சியம், கோட்டை இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் என்பவற்றைக் கருதினர். யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றியவுடன் வன்னிஇராச்சியம் இயல்பாகவே தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் என்பது அவர்கள் போட்ட தப்பான கணக்காக இருந்தது. ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பிறகு பல்நெடும் காலமாகவே வன்னியைக் கைப்பற்ற முடியாமல் இருந்திருக்கிறது. வன்னிநிலத்தைக் கைப்பற்றுவதற்கும் தமக்குக் கீழ் அடிபணிய வைப்பதற்கும் தயக்கமும் ஒல்லாந்தரிடம் காணப்பட்டது. அதற்கான கரணியம் இரண்டு உள்ளன. ஒன்றுபண்டாரவன்னியன்உட்படவன்னியை ஆண்ட வெவ்வேறு பிரிவு மன்னர்களின் ஆட்சி மீது இருந்த ஒரு வகையான பயம். மற்றது கண்டி இராசதானிக்கும், வன்னி இராசதானிக்கும் இடையில் இருந்த வெகுவான தொடர்பு. இந்த தொடர்புக்கான கரணியம் வன்னியை ஆண்ட வன்னிய மன்னர்களும் சரி, கண்டி இராச்சியத்தை அப்பொழுது ஆண்ட நாயக்க வழி தமிழ்மன்னர்களும் சரி இருவரும் மிக நெருக்கமான நட்பை உடையவர்களாக இருந்தமையாகும். இந்த விடயம் ஒல்லாந்தருக்குப் புரிந்தது. யாழ் இராசதானியை முற்றாகக் கைப்பற்றிய பிறகு ஒட்டுசுட்டானுக்கும் நெடுங்கேணிக்கும் இடையே ஒட்டுசுட்டானிலிருந்து நான்கு கிலோமீற்றர் தொலைவில் உள்ள பண்டாரிக்குளத்தில்தான் இந்த வாள்கொடி வீரன் பண்டாரவன்னியனின் ஆட்சிப்பீடம் அமைந்திருக்க வேண்டும். குமுழமுனைக்கு அருகிலுள்ள குருந்தூர் சைவ ஆலயம் பண்டாரவன்னியனின் அரண்மனை என்றும் கோட்டை என்றும் மாறுபட்ட கருத்துக்கள் இன்றும் நிலவிவருகின்றன.

பண்டாரவன்னியன் வளைவு, பண்டாரவன்னியன் கிணறு என்பன அழிந்த நிலையில் குமுழமுனைக் கிராமத்தில் இன்றும் காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும் இன்றும் பல வரலாற்று எச்சங்கள் பண்டாரவன்னியனின் ஆட்சிக்கு சாட்சியாக உள்ளன. தான் ஓர் இராச்சியமாக நிமிர்ந்து நின்ற போதும் யாழ்ப்பாண இராச்சியம், கண்டி இராச்சியம் போன்ற அரசுகளோடு நட்புப் பாராட்டியும் ஆபத்தான வேளைகளில் உதவிகளை வழங்கியும் வன்னி இராச்சியம் இருந்திருப்பதை ஆதாரபூர்வமாக நிறுவமுடியும். குறிப்பாக கண்டி இராச்சியத்தை ஆண்ட நாயக்கர் வழித் தமிழ் மன்னர்களோடு வலுவான உறவுகள் இருந்ததை பல்வேறு வரலாற்று நூல்கள் வெளிப்படுத்துகின்றன.

## கல்விக்கதிர்

- அகரன் -

# யாழ்ப்பாணம் கோட்டை

யாழ்ப்பாண அரசு 1619 இல் போத்துக்கீசரின் நேரடி ஆட்சியின் கீழ் வந்ததும், தலைநகரத்தை நல்லூரிலிருந்து அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு மாற்றினர். அங்கே யாழ்ப்பாணக் குடாக்கடலை அண்டி ஒரு கோட்டையையும் கட்டினர். ஓகஸ்ட் மாதத்தில் பாதுகாப்புக்காகக் கோட்டையொன்றைக் கட்டிக்கொள்ள கோவாவிலிருந்த தலைமையகத்திலிருந்து பிலிப்பே டி ஒலிவேராவுக்கு அனுமதி கிடைத்திருந்தது. எனினும் பொருத்தமான இடமொன்றைத் தெரிவுசெய்து கோட்டையின் கட்டட வேலை 1625 ஆம் ஆண்டிலேயே ஆரம்பமானது.



1629 இல் இது உபயோகத்திலிருந்ததெனினும், 1637 இல் கூட இது முற்றாகக் கட்டி முடிக்கப்படவில்லையென்றே தெரிகிறது. இது கிட்டத்தட்ட சதுர வடிவமானது. நான்கு மூலைகளிலும் அமைந்த காவலரண்களுடன், ஒவ்வொரு பக்கச் சுவர்களின் மத்தியிலும் அரைவட்ட வடிவிலமைந்த அரண்களும் இருந்தன. கோட்டைக்குள்ளே கத்தோலிக்கத் தேவாலயமொன்றும், கப்டன் மேஜரின் வீடும், வைத்தியசாலையொன்றும் மேலும் சில முக்கியமான கட்டடங்களும் இருந்தன. போத்துக்கீசரின் யாழ்ப்பாண நகரம் (போர்த்துக்கேயர் குடியேற்றம்) கோட்டைக்கு வெளியிலேயே இருந்தது.

### ஒல்லாந்தர் காலம்

யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் 1658 ஜூன் 22 இல் கைப்பற்றினர். போர்த்துக்கேயரின் கோட்டையையே ஒல்லாந்ததும் சில ஆண்டுகள் பயன்படுத்தினர். பின்னர் அதனை இடித்துவிட்டு ஐங்கோண வடிவிலமைந்த புதிய கோட்டையைக் கட்டினார்கள். முதலில் ஐங்கோண கோட்டையில் உள்ள அரண்களையும், பின்னர் 18 ஆம் நூற்றாண்டில் வெளிச் சுற்று அரண்களையும் கட்டினர். இக்கோட்டைக்குள் கட்டளைத் தளபதியின் இல்லமும், பிற படை அதிகாரிகளுக்கான இல்லங்களும் இருந்தன. மருத்துவமனை, சிறைச்சாலை என்பன உள்ளிட்ட வேறு பல கட்டடங்களும் இக்கோட்டைக்குள் காணப்பட்டன. இவற்றுடன், கிரேக்கச் சிலுவை வடிவில் அமைந்த தேவாலயம் ஒன்றும் அமைந்திருந்தது.

### தற்காலம்

1984 - 1987 காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தின் பெரும்பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோதும், யாழ்ப்பாணக்கோட்டை இராணுவத்தின் வசமே இருந்து வந்தது. 1989 ஆம் ஆண்டில் இந்திய அமைதிகாக்கும் படை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிய பின்னர் கோட்டையை முற்றுகையிட்ட புலிகள் பல மாதங்களின்பின் அதனைக் கைப்பற்றிக்கொண்டனர். கைப்பற்றிய சிறிது காலத்தில் மீண்டும் இவ்வாறான நிகழ்வைத் தடுக்க கோட்டையின் பெரும்பகுதி புலிகளின் ஆலோசனையின் கீழ் அழிக்கப்பட்டது. 1995 இல் யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் மீண்டும் கைப்பற்றியபோது இக்கோட்டையின் எச்சங்கள் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் வந்தன.

# நேர்காணல்

## TN Aari work உரிமையாளர் நிவேதா திலீபன் உடனான நேர்காணல்.

**நேர்கண்டவர் - திருமலை தட்சா**



**01. உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

எனது பெயர் நிவேதா திலீபன். நிலாவெளி பிரதேசத்தில் TN Aari work எனும் பெயரில் இரண்டு வருடங்களாக இவ் ஆரி வேர்க் தொழிலை சுயதொழிலாக முன்னெடுத்து வருகின்றேன்.

**02. இக் கலைத்துறையில் ஈடுபடுவதற்கான ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?**

நான் இக் கலைத்துறையில் நுழைவதற்கு காரணம் அழகுக் கலையில் இருந்த ஆர்வமே. அழகுக்கலை சார்ந்த துறையில் இவ் ஆரி வேர்க் துறையும் முக்கிய பங்காற்றி வருகிறது. அதனால் இத்துறை மீதான அதிக நாட்டம் ஏற்பட வழிவகுத்தது. இதனை ஆரம்பத்தில் முறைப்படி கற்கும் போது மிகவும் கடினமாகவே இருந்தது. ஆயினும் விடாப்பிடியாக கற்று முடித்ததற்கு எனக்கு ஊக்கத்தை வழங்கியதோடு உறுதுணையாக இருந்தவர் எனது கணவர் திலீபன். இன்று எனது வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ற வகையிலும், நான் வாழும் நிலாவெளிப் பிரதேசத்தில் நியாயமான விலையுடனும் எனது சுயதொழிலை முழுத் திருப்தியுடன் முன்னெடுத்து வருகிறேன்.



## நாம் செய்யும் தொழிலை நேசித்தாலே முன்னேற்றம் அடையலாம்.

**03. இத் துறையை சுயதொழிலாக நீங்கள் தேர்ந்தெடுத்தமைக்கான காரணம் யாது?**

எனது பிரதேசத்தில் இருப்பவர்களில் அதிகளவானோர் ஆரி வேர்க்கிற்காக தொலைதூரம் திருகோணமலைக்கே செல்கின்றார்கள். அதன் நிமித்தம் எனது பிரதேசத்து மக்களுக்காக ஆரி வேர்க்கினை திருப்திகரமாகவும், நேர்த்தியாகவும், நியாயமான விலையிலும் செய்ய வேண்டுமென்ற ஆர்வமே என்னை இத் துறையை சுய தொழிலாக முன்னெடுக்க வழி வகுத்தது எனலாம்.

**04. இத்துறையில் எவ்வாறான வேலைப்பாடுகளை மேற்கொள்கிறீர்கள்?**

ஆரி வேர்க் தையல் முறையில் அதிகளவான தையல் வகைகள் உள்ளன. அதில் உதாரணமாக, basic chain stitch, zig zag stitch, chain with zig zag stitch, fish bone stitch, water filling stitch, flat load stitch, chain and filling stitch, pendent work, mirror work, coin work, kundan stone stitch, cut work French knot work எனப் பல விதமான தையல் வகைகள் உள்ளன. இந்த முறைகளைப் பயன்படுத்தி நான் செய்து வருகிறேன். நான் குறைவான தையல் வகைகளையே கற்றுக் கொண்டேன். ஆனாலும் வலை ஒளி மூலமாக மேலும் பலவற்றைக் கற்றுக் கொண்டு ஒவ்வொரு வடிவமைப்புக்களையும் நேர்த்தியான முறையிலும், வாடிக்கையாளர்களை கவரும் விதத்திலும் செய்து கொடுத்து வருகிறேன்.

**05. இத்துறையில் நீங்கள் மேற்கொண்ட வேலைப்பாட்டில் உங்கள் திறமைக்கு சவாலாக அமைந்த விடயம் பற்றி?**

எனது திறமைக்கு சவால் என்றால் கனமான வடிவமைப்பினை தைக்கும் போது தனியாக செய்வதால் அதிகளவு நேரம் தேவைப்படும். குறுகிய நேரத்திற்குள் செய்வதற்கு சிரமப்பட்டுள்ளேன். ஆயினும், குறிப்பிட்டபடி வாடிக்கையாளரின் கையில் சேர்த்து விடுவேன். சவால்களுக்கு முகங்கொடுத்தல் தான் இன்னும் எனது சுயதொழிலை மேம்படுத்தி வருகிறது என நினைக்கின்றேன்.

**06. ஒரு வேலைப்பாட்டினை மேற்கொள்ளும் போது எவ்வாறான உத்திகளை கைக்கொண்டு வருகின்றீர்கள்?**

ஆரி வேர்க் செய்ய பயன்படுத்தும் துணியை நன்கு இறுக்கமாக Aari cotஇல் ஆரி வேர்க் தறியில் கட்ட வேண்டும். இறுக்கமாக கட்டியதன் பிறகு துணியில் வடிவங்களை கீற வேண்டும். அதன் பிறகு ஆரி வேர்க்கினை தைக்கத் தொடங்க வேண்டும். இவ்வாறு செய்யும் போது வடிவமைப்பு நேர்த்தியாகவும், கவர்ச்சிகரமானதாகவும் அமையும்.

**07. எவ்வாறான வடிவமைப்பு வகைகளை வாடிக்கையாளர்கள் மூலம் பெறுகின்றீர்கள்?**

வாடிக்கையாளர்கள் எவ்வாறான வடிவங்களில் செய்யத் தருகிறார்களோ அவ்வாறான வடிவத்திலே செய்து கொடுத்து வருகிறேன். குறைந்த விலையில் இருந்து கூடிய விலையில் வாடிக்கையாளரின் வசதிக்கேற்ற வகையில் ஆரி வேர்க்கினை செய்து கொடுத்து வருகிறேன்.

**08. இத் துறையில் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்?**

ஆரி வேர்க் செய்வதற்கு தேவையான பொருள்களை பெற்றுக் கொள்வதில் சற்று சிரமம் ஏற்படும். நகர பிரதேசங்களிலிருந்து வரும் ஓடர்களை விட இங்கு மிகவும் குறைவாகவே வரும். காரணம் சிலருக்கு ஆரி வேர்க் என்றால் என்ன என்ற விளக்கம் இல்லாமல் இருக்கும்.

**09. இதன் மூலமாக கிடைக்கும் வருமானம் திருப்தியளிக்கின்றதா?**

ஓரளவான வருமானத்தினையே பெற முடிகின்றது. காரணம் எனது பிரதேசத்து மக்களுக்கு குறைவான விலையிலேயே செய்து கொடுத்து வருவதாலேயாகும்.

**10. உங்களது நிலாவெளி பிரதேசத்தில் இத்துறை மீதான வரவேற்பு எவ்வாறு உள்ளது?**

ஆரம்பத்தில் நான் ஆரி வேர்க் தொழில் செய்வது தெரியாமல் இருந்தாலும் தற்சமயம் ஓரளவுக்கு அனைவருக்கும் தெரிந்து ஓடர்கள் தேடி வருகின்றன.

**11. இத்துறை தவிர, வேறு துறைகளில் நாட்டம் குறித்து?**

கிலாஸ் பெயிண்டிங் செய்து வருகிறேன். ICTTஇல் NVQ level 4இனை பூர்த்தி செய்துள்ளேன். மாஸ் மீடியா டிப்ளோமா பூர்த்தி செய்து உள்ளேன். அழகுக் கலையில் (Theory) NVQ level 4 இனை பூர்த்தி செய்து உள்ளேன். இவை தவிர கர்நாடக சங்கீதப் பாடல்கள் பாடுவதிலும் மிகுந்த ஆர்வமுள்ளது.

**12. நிறைவாக, சுய தொழிலை மேற்கொண்டு வரும் பெண்களுக்கு நீங்கள் கூற விரும்புபவை?**

எத் துறையாக இருந்தாலும் அதனை சரியான முறையில் தேர்ந்தெடுத்து பெண்கள் தங்களுக்கென்று சுயதொழிலை முன்னெடுக்க வேண்டும். படிப்படியாக விடா முயற்சியோடு எம் தொழிலை முன்னெடுத்து வரும் போது சமூகத்தின் மத்தியில் எமக்கான வரவேற்பும், வெற்றியும் தானாகவே தேடி வரும் என்பதோடு நாம் செய்யும் தொழிலை நேசித்தாலே முன்னேற்றம் அடையலாம்.

இலக்கிய நயம்

கலைக் கதிர்



# கம்பனின் காதல்

விசுவாமித்திரன் முன்னே நடக்க, ராமனும் அவன் தம்பி லட்சுமணனும் பின்னால் வருகிறார்கள். மிதிலை நகர எல்லைக்குள் கால் பதிக்கிறார்கள்.

அந்த ஊர் மதில்கள் மீது கொடிகள் பறக்கின்றன. அவை ராமனை நோக்கிக் கை அசைத்து 'வா, வா' என்று அழைப்பது போல் தோன்றுகிறதாம்.

ராமன் ஏன் மிதிலைக்குள் வரவேண்டும்?

காரணம் இருக்கிறது. 'மை அறு மலரின் நீங்கி, யான் செய்மா தவத்தின் வந்து செய்யவள் இருந்தாள்' என்று அந்தக் கொடிகள் சொல்வதாகக் கம்பர் வர்ணிக்கிறார். குற்றமில்லாத தாமரை மலரை விட்டு நீங்கிய திருமகள், எங்கள் நகரம் செய்த தவத்தினால் இங்கே சீதையாக வந்து பிறந்திருக்கிறாள். ஆகவே, ராமா நீ இங்கே வா, அவளுடைய கைத்தலம் பற்றிக் கொள்!

சீதை அப்பேர்ப்பட்ட அழகியா?

பின்னே? 'மதனற்கும் எழுத ஒண்ணாச் சீதை' என்கிறார் கம்பர். அந்த மன்மதனால்கூடச் சீதையின் அழகை ஓவியமாகத் தீட்டமுடியாதாம்.

மன்மதன் யோசித்தான், மற்ற வண்ணங்களெல்லாம் சீதையைப் படமாக வரைய போதாது என்று, அமுதத்தை எடுத்தான், அதில் தூரிகையைத் தோய்த்தான், படம் வரைய நினைத்தான்.

அப்பேர்ப்பட்ட அமுதத்தால்கூட அந்தப் பேரழகைப் பதிவு செய்ய முடியவில்லையாம். மன்மதன் திகைத்துப்போய் நிற்கிறான். 'ஆதரித்து அமுதில் கோல் தோய்த்து அவயம் அமைக்கும் தன்மை யாதெனத் திகைக்கும்!'

இப்படிக் கம்பர் வர்ணித்துக்கொண்டிருக்கும்போதே, ராமரும் லட்சுமணரும் விசுவாமித்திரருடன் மிதிலைக்குள் நுழைந்துவிடுகிறார்கள். பல காட்சிகளைக் கண்டபடி நடக்கிறார்கள்.

அங்கே ஒரு நடன சாலை. அதில் 'ஐயம் நுண் இடையார்', அதாவது இடை இருக்கிறதா, இல்லையா என்று சந்தேகம் வரும்படி நுட்பமான இடுப்பைக் கொண்ட பெண்கள் நடனமாடுகிறார்கள்.

இன்னொருபக்கம், சில பெண்கள் ஊஞ்சலாடிக்கொண்டிருக்கிறார்கள், எப்படி? 'மாசு உறு பிறவிபோல் வருவது போவது ஆகி', தவறு செய்தவர்கள் மீண்டும் மீண்டும் இந்தப் பூமியில் பிறப்பதைப்போல, அவர்களுடைய ஊஞ்சல் முன்னும் பின்னும் ஆடுகிறதாம். அதைப் பார்த்த ஆண்களின் உள்ளமும் அதோடு சேர்ந்து தடுமாறுகிறதாம்.

வேறொருபக்கம், சில பெண்கள் பாடிக்கொண்டிருக்கிறார்கள், சில பெண்கள் பூப்பறிக்கிறார்கள், பந்தாடுகிறார்கள், குளிக்கிறார்கள். ஆனால் இவர்களில் யாரையும் ராமன் நிமிர்ந்து பார்க்கவில்லை. சமர்த்தாக முனிவரின் பின்னே நடந்துகொண்டிருக்கிறான்.

சிறிது நேரத்தில், அவர்கள் அரண்மனையை நெருங்குகிறார்கள். அங்கே கன்னிமாடத்தில் சீதை நிற்கிறாள். அந்தக் காட்சியைக் கம்பர் இப்படி வர்ணிக்கிறார்:

**பொன்னின் சோதி, போதின் நாற்றம், பொலிவேபோல்**
**தென் உண் தேனின் தீம் சுவை, செம் சொல் கவி இன்பம்,**
**கன்னி மாடத்து உம்பரின் மாடே களி பேடோடு**
**அன்னம் ஆடு முன் துறை கண்டு ஆங்கு அயல் நின்றார்**

தங்கத்தின் பிரகாசம், பூவின் நறுமணம், வண்டுகள் அருந்துகின்ற தேனின் இனிமையான ருசி, சிறந்த சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதிய நல்ல கவிதை தரும் இன்பம். இவை எல்லாவற்றையும் ஒன்றாகத் திரட்டியதுபோன்ற ஓர் உருவம், கன்னிமாடத்தில் நிற்கிறது. அங்கே அன்னங்கள் சேர்ந்து விளையாட, அவற்றின் நடுவே சீதை தோன்றுகிறாள்.

சீதையைப் பார்த்த மனிதர்களெல்லாம் 'அடடா, தேவர்களைப் போல நமக்கும் இமைக்காத விழி கிடைத்தால் இவளைப் பார்த்துக்கொண்டே இருக்கலாமே' என்று ஏங்குகிறார்களாம். அந்தத் தேவர்களோ 'நமக்கு இரண்டு கண்கள்தானே இருக்கிறது, சீதையைப் பார்க்க இவை போதாதே, இன்னும் ஏழெட்டுக் கண் கிடைத்தால் நன்றாக இருக்குமே' என்று தவிக்கிறார்களாம். ('இமையா நாட்டம் பெற்றிலம் என்றார், இரு கண்ணால் அமையாது என்றார் வானத்தவர்')

கன்னிமாடத்தில் சீதையின் அருகே பல பெண்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாரும் சீதையுடைய அழகுக்கு இணையாகமாட்டார்கள். 'சதகோடி முன் சேவிக்க, மின் அரசு எனும்படி நின்றாள்' என்கிறார் கம்பர். நூறு கோடி மின்னல்கள் சுற்றிலும் வந்து நின்று வணங்கி நிற்க, நடுவில் அவர்களுக்கெல்லாம் தலைவியாக நின்ற 'மின்னல் அரசி'யாம் சீதை!

இன்னும், சீதையின் அழகைக் கண்டு 'குன்றும், சுவரும், திண் கல்லும், புல்லும்' உருகுகின்றன, அவள் அணிந்திருக்கிற நகைகளால் சீதைக்கு அழகு இல்லை, சீதையால்தான் அந்த ஆபரணங்களுக்கு அழகு ('அழகெனும் மணியுமோர் அழகு பெற்றவே'), பெண்களே அவளைக் கண்டு காதல் கொள்கிறார்கள் ('மங்கையர்க்கு இனியது ஓர் மருந்து') இப்படிக் கம்பர் அடுக்கிக்கொண்டே போகிறார்.

அப்பேர்ப்பட்ட சீதையை, ராமன் பார்க்கிறான், அவளும் அவனைப் பார்க்கிறாள், புகழ் பெற்ற 'அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்' பாடல் இப்படித் தொடங்குகிறது:

**எண் அரு நலத்தினாள், இனையள் நின்று உழிக்**
**கண்ணொடு கண்ணினைக் கவ்வி, ஒன்றை ஒன்று**
**உண்ணவும், நிலை பெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்**

நினைக்கவும் அரிதான அழகைக் கொண்ட சீதை கன்னிமாடத்தில் நிற்க, அவளுடைய கண்களும் ராமனின் கண்களும் ஒன்றையொன்று கவ்வி உண்கின்றன, இருவரும் நிலை தடுமாறுகிறார்கள், காதல்வயப்படுகிறார்கள்.

இந்தக் காட்சி வான்மீகியில் இல்லை. அங்கே ராமன் வில்லை உடைத்தபிறகுதான் சீதையைப் பார்க்கிறான். அதிலிருந்து சற்றே மாறுபட்டு, தமிழுக்காகக் கம்பர் வடித்துத் தந்த அற்புதமான பகுதி இந்தக் 'காட்சிப் படல'ப் பாடல்கள். ஒவ்வொன்றும் அற்புதமான அழகு கொண்டவை.

'நோக்கு எனும் பாசத்தால் பிணித்து', கண் பார்வை என்கிற கயிற்றினால் ஒருவரை ஒருவர் கட்டி ஈர்த்துக்கொள்கிறார்கள். ராமன் மனம் சீதையை இழுக்க, சீதையின் மனம் ராமனைத் தன்னருகே இழுக்க. 'இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்' என்று முடிக்கிறார் கம்பர்.

முதல் பார்வையா? யார் சொன்னது? திருமால் அவதாரம் ராமன், திருமகளின் அவதாரம் சீதை, இருவரும் ஏற்கெனவே ஒருவரை ஒருவர் பிரியாமல் வாழ்ந்தவர்கள்தான். இந்தப் பிறவியில் ரொம்ப நாள் கழித்துச் சந்திக்கிறார்கள், அதனால், சட்டென்று காதல் பற்றிக்கொள்கிறது. 'பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ' என்று உருகுகிறார் கம்பர்.

இதெல்லாம் முனிவர் விசுவாமித்திரருக்குத் தெரியுமா? அவர் பாட்டுக்கு நடக்கிறார். ராமனும் அவருக்குப் பின்னே சென்றுவிடுகிறான்.

சீதை துடித்துப்போகிறாள். அதைச் சொல்லும் கம்பன் வர்ணனை: 'கண் வழி புகுந்த காதல் நோய், பால் உறு பிரை என எங்கும் பரந்தது.'

பாலில் ஒரு துளி மோரைதான் பிரை ஊற்றுகிறோம். அது பால்முழுவதும் சென்று அதனைத் தயிராக மாற்றிவிடுகிறது அல்லவா? அதுபோல, கண்களின்வழியே சீதைக்குள் நுழைந்த காதல் நோய், அவளுடைய உடல்முழுவதும் பரந்து வருத்தியது. அவள் துடிதுடித்தாள்.

இதைப் பார்த்த தோழிகள் சீதைக்கு ஏதேதோ வைத்தியம் செய்கிறார்கள். மலர்ப் படுக்கையில் படுக்கவைக்கிறார்கள், சந்தனம் பூசுகிறார்கள், சாமரம் வீசுகிறார்கள், திருஷ்டி கழிக்கிறார்கள்.

எந்தப் பலனும் இல்லை. சீதை பலவிதமாகப் புலம்பத் தொடங்குகிறாள். அவற்றுள் ஓர் அருமையான பாட்டு:

**இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சியும்,**
**சந்திர வதனமும், தாழ்ந்த கைகளும்,**
**சுந்தர மணி வரைத் தோளுமே அல**
**முந்தி, என் உயிரை அம் முறுவல் உண்டதே!**

'என்னை வருத்துவது எது? இந்திர நீலம் என்ற உயர்ந்த கல்லைப்போல இருண்ட அவனுடைய தலைமுடியா? நிலவைப் போன்ற முகமா? நீண்ட கைகளா? அழகான ரத்தின மலை போன்ற தோள்களா?'

'இவை எதுவுமே இல்லை, எல்லாவற்றுக்கும் முன்பாக, அவனுடைய உதட்டில் பரவிய அந்தப் புன்சிரிப்பு, அதுதான் என்னுடைய உயிரை உண்டுவிட்டது!'

இங்கே 'தாழ்ந்த கைகளும்' என்ற பிரயோகத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது, நீண்ட கைகள், அதனை ராஜ லட்சணம் என்று சொல்வார்கள்.

என்னதான் ராஜாவானாலும், காதல் வந்துவிட்டால் அவன் நிலைமையும் பரிதாபம்தான். சீதையைப் பார்த்துவிட்டு விசுவாமித்திரருடன் சென்ற ராமனும் அப்படிப்பட்ட ஒரு தவிப்பில்தான் சிக்கிக் கிடந்தான்.

'பொருள் எலாம் அவள் பொன்னுருவாயவே' என்கிறார் கம்பர். 'பார்க்கும் இடத்திலெல்லாம் நந்தலாலா' என்று பாரதி பாடியதுபோல, ராமனுக்கு எதைப் பார்த்தாலும் சீதையின் பொன் வடிவம்மட்டுமே தெரிகிறதாம். அவளையே நினைத்துக்கொண்டு படுத்துக் கிடக்கிறான்.

திடீரென்று ராமனுக்கு ஒரு சந்தேகம். 'ஒருவேளை, அந்தப் பெண் ஏற்கெனவே திருமணமானவளாக இருந்துவிட்டால்? என்னுடைய காதல் பிழையாகிவிடுமே!'

மறுகணம், அவனே தன்னைச் சமாதானப்படுத்திக்கொள்கிறான். 'நல் வழி அல் வழி என் மனம் ஆகுமோ?' என்னுடைய மனம் எப்போதும் கெட்ட வழியில் போகவே போகாது, ஆகவே, இன்றைக்கு நான் இந்தப் பெண்ணைப் பார்த்துக் காதல்வயப்படுகிறேன் என்றால், அவள் எனக்கெனப் பிறந்தவளாகதான் இருக்கவேண்டும்.

ராமன் இப்படிப் பலவிதமாக யோசித்துக்கொண்டிருக்கையில், பொழுது விடிகிறது. விசுவாமித்திரர் அவனை ஜனகரிடம் அழைத்துச்சென்று அறிமுகப்படுத்துகிறார். சிவ தனுசு கொண்டுவரப்படுகிறது. யாராலும் தூக்கக்கூடமுடியாத அந்த வில்லை ராமன் எடுத்துப் பூட்டி முறித்துவிடுகிறான்.

அந்த ஓசை, மூன்று உலகங்களில் இருந்த எல்லோருக்கும் கேட்டதாம், இதற்குச் சாட்சி, ராமனின் தந்தை தசரதன்!

ராமன் வில்லை முறித்தபோது, தசரதன் ஏதோ ஆலோசனையில் ஈடுபட்டிருக்கிறான். திடீரென்று ஒரு பெரிய சத்தம் கேட்கிறது. 'என்ன அது?' என்று குழம்புகிறான்.

பின்னர் ஜனகனின் தூதுவர்கள் அவனை வந்து சந்தித்து விடயத்தைச் சொன்னபிறகு, தசரதனுக்கு அந்த மர்மம் விளங்குகிறது. 'வில் இற்ற பேரொலி கொல் அன்று இடித்தது ஈங்கு' என்று வியப்பாகச் சொல்கிறான்.

ஆனால், எங்கேயோ அயோத்தியில் இருக்கும் தசரதனுக்குக் கேட்ட இந்த 'வில் முறியும் சத்தம்', அதே மிதிலை நகரில் இருக்கும் சீதைக்குக் கேட்கவில்லை. காரணம், அவள் ராமனை எண்ணி மயக்கத்தில் இருக்கிறாள். ஆகவே, அந்த ராமன் வில்லை முறித்த செய்தியும் அவளுக்குத் தெரியவில்லை.

அப்போது, மிதிலை நகரெங்கும் கொண்டாட்டம். 'இவ்வளவு நாளாக ஜனகனின் சிவதனுசை வளைக்கும் ஆண் மகன் யாருமே இல்லையா என்று ஏங்கினோமே, அப்படி ஒரு பெரிய வீரன் வந்துவிட்டான், சீதையின் திருமணம் நிச்சயமாகிவிட்டது' என்று எல்லாரும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்கள்.

மற்றவர்கள் சொல்வது இருக்கட்டும். மணப்பெண் சீதையிடம் செய்தியைச் சொல்லவேண்டாமா? 'மாலை' என்ற தோழி உற்சாகத்துடன் சீதை இருக்கும் இடத்தை நோக்கி ஓடுகிறாள்.

முன்பு சீதையை 'மின் அரசு' என்று வர்ணித்த கம்பர், இப்போது அதே உவமையைச் சற்றே மாற்றிப் பயன்படுத்துகிறார், 'நுடங்கிய மின் என', துவண்ட மின்னலைப்போலப் படுக்கையில் கிடக்கிறாள் சீதை.

அப்போது, தோழி உள்ளே நுழைகிறாள். நடந்ததை விவரிக்கிறாள்:

**மாத்திரை அளவில் தாள் மடுத்து, முன்பயில்**
**சூத்திரம் இதுவெனத் தோளின் வாங்கினான்,**
**ஏத்தினர் இமையவர் இழிந்த பூமழை,**
**வேந்து அவை நடுக்கு உற முறிந்து வீழ்ந்ததே!**

'இளவரசியே, யாரோ ஒருவன், ராமன் என்று பெயராம், தம்பியோடும் முனிவரோடும் வந்தான், பெரிய சிவதனுசைக் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் கையில் பிடித்துத் தூக்கினான், ஒரு பக்கத்து முனையைக் காலால் மிதித்தான், ஏற்கெனவே பலமுறை பழகிய ஒரு வில்லைக் கையாள்வதுபோல் சுலபமாக வளைத்தான், அதைப் பார்த்து வியந்த தேவர்கள் பூமாலை தூவிப் பாராட்டினார்கள், மறுகணம், அந்த வில் முறிந்து விழுந்தது, நம் அவையில் உள்ள எல்லாரும் நடுக்கத்துடன் அவனைப் பார்த்தார்கள்!'

சீதைக்கு மகிழ்ச்சி. காரணம், 'யாரோ ஒருவன், தம்பியோடும் முனிவரோடும் வந்தான்' என்கிற வர்ணனை, அவள் மனத்தில் உள்ள அந்த ஆணுக்குப் பொருந்திப்போகிறது. வில்லை முறித்தவன் அவன்தானா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனாலும், அவனாகதான் இருக்கவேண்டும் என்று அவளுடைய உள்ளுணர்வுக்குத் தோன்றுகிறது.

முன்பு ராமன் 'என் மனம் கெட்ட வழியில் போகாது' என்று யோசித்துத் திருப்தி அடைந்தான் அல்லவா? அதுபோலதான் சீதை அடைந்த மகிழ்ச்சியும். 'நான் அவனை மனத்தில் நினைத்திருக்கிறேன், உடனே ஒருவன் தோன்றி என்னுடைய சுயம்வர வில்லை முறிக்கிறான், அப்படியானால் இருவரும் ஒருவராகதான் இருக்கவேண்டும்' என்று திருப்தி அடைகிறாள்.

ராமனுக்கும் அதே போன்ற ஒரு குழப்பம்தான். 'வில்லை முறித்துவிட்டேன், அதற்காக ஓர் இளவரசியை எனக்குத் திருமணம் செய்து தரப்போகிறார்கள். ஆனால், இந்த இளவரசியும், நான் அன்றைக்குக் கன்னிமாடத்தில் பார்த்த அந்தப் பெண்ணும் ஒருவர்தானா? அதை எப்படி உறுதிசெய்துகொள்வது?'

இதற்கான வாய்ப்பு ராமனுக்கோ சீதைக்கோ உடனே கிடைக்கவில்லை. நெடுநேரம் கழித்து, சீதையைத் தசரதன் முன்னால் அழைத்துவந்து அறிமுகப்படுத்தும்போதுதான், அவளும் ராமனும் மறுபடி சந்திக்கிறார்கள்.

ராமன் சீதையை நிமிர்ந்து பார்க்கிறான். குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சியடைகிறான். அந்தக் காட்சியை ஒரு மிக அழகான பாடலில் தொகுக்கிறார் கம்பர்:

**அன்னவளை அல்லள் என, ஆம் என அயிர்ப்பான்,**
**கன்னி அமிழ்தத்தை எதிர் கண்ட கடல் வண்ணன்**
**உன்னு உயிர் நிலைப்பது ஓர் அருத்தியொடு உழைத்து ஆண்டு**
**இன் அமிழ்து எழக் களிகொள் இந்திரனை ஒத்தான்**

சீதையை அங்கே பார்ப்பதற்கு முன்புவரை, ராமனின் மனத்தில் ஒரே தடுமாற்றம், 'நான் அன்றைக்குப் பார்த்த பெண்ணும், இப்போது என் மனைவியாகப்போகிற இந்தப் பெண்ணும் ஒருவர்தானா? இல்லையா?' என்று தவிக்கிறான்.

இப்போது, அவளை நேரில் பார்த்தாகிவிட்டது. 'அவள்தான் இவள்' என்று ஆனந்தம் அடைகிறான். இங்கே ராமனை இந்திரனுக்கு ஒப்பிடுகிறார் கம்பர்.

இந்திரனுக்கும் ராமனுக்கும் என்ன சம்பந்தம்?

பாற்கடலில் அமுதத்தைத் தேடிப் பல காலம் கடைந்தார்கள். அதிலிருந்து அமுதம் எழுந்து வந்தது. அதைக் கண்ட இந்திரன் மகிழ்ந்தான்.

அதுபோல, இன்றைக்குச் சீதை சபையில் எழுந்து நிற்கிறாள். அவளைக் கண்ட ராமனுக்குக் குழப்பம் தீர்ந்தது ஒருபக்கம், இன்னொருபக்கம், அவளைப் பார்த்து உறுதி செய்துகொண்டுவிட்ட காரணத்தால், போன உயிர் திரும்பக் கிடைக்கிறது, அதனால்தான் சீதையைக் 'கன்னி அமிழ்தம்' என்கிறார் கம்பர்.

ராமனின் சந்தேகம் தீர்ந்தது, சந்தோஷம். சீதையின் நிலைமை என்ன?

சாதாரணமாகப் பெண்கள் ஆண்களை நிமிர்ந்து பார்ப்பது அந்தக் காலத்தில் வழக்கம் இல்லையே. ஏதாவது தந்திரம்தான் செய்யவேண்டும்.

**எய்ய வில் வளைத்ததும், இறுத்ததும் உரைத்தும்**
**மெய் விளைவு இடத்து முதல் ஐயம் விடல் உற்றாள்,**
**ஐயனை அகத்து வடிவே அல, புறத்தும்**
**கை வளை திருத்துபு கடைக்கணின் உணர்ந்தாள்**

'ஒருவன் வில்லை வளைத்தான், உடைத்தான்' என்கிற செய்தி கேட்டதுமே சீதையின் சந்தேகம் பெருமளவு தீர்ந்துவிட்டது. என்றாலும், தன் மனத்தில் உள்ள அவன்தான் இங்கே நிஜத்திலும் இருக்கிறான் என்பதை உறுதிபடுத்திக்கொள்ள அவள் விரும்பினாள். கையில் இருக்கும் வளையல்களைச் சரி செய்வது போல், ஓரக்கண்ணால் ராமனைப் பார்த்தாள், 'அவனே இவன்' என்று மகிழ்ந்தாள்.

அப்புறமென்ன? காதல் நோயால் வாடிக் கிடந்த சீதையின் உடல் மீண்டும் பழையபடி ஆகிறது. 'ஆரமிழ்து அனைத்தும் ஒருங்குடன் அருந்தினரை ஒத்து உடல் தடித்தாள்' என்கிறார் கம்பர். 'அரிய அமுதம் முழுவதையும் தனி ஆளாகக் குடித்துவிட்டவளைப்போலப் பூரித்துப்போனாள்.

இப்படியாக, அன்றைக்குக் கன்னிமாடத்தில் தொடங்கிய பார்வை நாடகம், இங்கே ஓர் ஓரப்பார்வையில் வந்து இனிதே முடிகிறது!

# உளவியலும் முன்பள்ளி ஆசிரியர்களும்




குழந்தை உளவியல் என்பதென்ன? உளவியல் என்பது உள்ளம் பற்றி அனுபவரீதியாக ஆய்வு செய்யும் விஞ்ஞானம் எனக் கருதப்படுகின்றது. குழந்தைகள் என்போர் கருவறை தொடக்கம் கல்வியைத் தொடரும் அனைத்துப் பிள்ளைகளையும் குறிக்கும். உளவியல் என்பது ஆங்கிலத்தில் (Psychology) என்று அழைக்கப்படுகின்றது. அது 'சைகே' 'லாகாஸ்' என்ற இரு கிரேக்கச் சொற்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியதாகும். 'சைகே' என்பது ஆன்மாவையும் 'லாகாஸ்' என்பது ஆராய்ச்சியையும் உணர்த்தி நிற்கின்றது எனக்கூறுவார்கள். இதனால் இத்துறை மனிதனின் ஆன்மா பற்றியது என்றும் ஆன்மாவின் இயல்பு பற்றியது என்றும் பொருள்தருவதாகக் கூறுவர். மனிதனது உள்ளம் பற்றி உரைத்த கருத்துக்கள் உளவியல் என்பதனுள் பொதிந்த பொருளாக விளங்குகின்றன. இதனால் மனிதனுடைய இயல்பு பற்றியும் அவனுடைய உளச்செயற்பாடு பற்றியும் காலத்துக்குக் காலம் பல கருத்துக்கள் உளவியலாளர்களினால் வெளியிடப்படுகின்றன. குழந்தை உளவியல் எனும்போது குழந்தைகளின் உள்ளத்தையிட்டு ஆராயப்படும் இயலாக அல்லது விஞ்ஞானமாக விளங்குகிறது. இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்ளும் அறிஞர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உளவியல் சிந்தனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளின் தூண்டுதலால் உடலில் நடத்தைக் கோலம் உருவாகிறது. உளவியல் மனித நடத்தையைப் பற்றி ஆராய்கின்றது. மனித நடத்தையின் உள்ளார்ந்த பண்புகள் எளிதிலே புலப்படக் கூடியன. அதனூடாக வெளிப்புறப் பண்புகளையும் உளவியல் ஆராய்கின்றது. இதனை 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள். இத்தகைய உளவியல் ஒரு பரந்த துறையாகும். கல்வி உளவியல் என்பது உளவியலின் முக்கிய ஒரு பிரிவாகும். உளவியலும் கல்வியும் மிகப் பரந்த ஆய்வுத் துறைகளாக இன்று விளங்குகின்றன. இன்றைய சமூக அமைப்பு மிகவும் சிக்கலடைந்து வருகின்றது. அறிவின் வேகமும் மிக அதிகமாகும். இவற்றின் மத்தியில் கற்றலையும் கற்பித்தலையும் எளிமைப்படுத்தவும் அவற்றை வினைத்திறன் மிக்கதாக ஆக்கவும் கல்வி உளவியலறிவு ஆசிரியர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கின்றது.

சிறப்பாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உளவியல் இன்றியமையாததாகும். ஏனெனில் முன்பள்ளி ஆசிரியர்கள் வீட்டுச் சூழலை முன்பள்ளியில் ஏற்படுத்தி 02 - 05 வயதுப் பிள்ளைகளின் அன்பினைப் பெறுபவர்கள். இளையதொரு சமுதாயத்தின் தலைவர்களை உருவாக்குபவர்கள். சிறுவர்களது விருப்பு, வெறுப்புக்களை அறிந்து, அதற்கேற்பச் செயற்படுபவர்கள். அவர்களைச் சிறந்த தலைவர்களாக்கப் பாடுபடுபவர்கள்.

## குழந்தை உளவியல்

கல்வி உலகில் குழந்தை உளவியல் சமூகத்தின் தேவை கருதி ஒரு தனித் துறையாக இன்று வளர்ச்சி கண்டு வருகின்றது. குழந்தை உளவியல் பற்றிய அறிவு இன்று ஆசிரியர்களுக்கு அவசியமானது எனக் கருதப்படுகின்றது. கல்வி கற்கும் குழந்தைகளின் தன்மைகள், கற்றல் செயல்முறையின் இயல்புகள், கற்றலுக்கு ஏற்ற சூழல் தொடர்பாகவும் குழந்தை உளவியல் ஆராய்கின்றது. குழந்தை உளவியல் குழந்தைகளின் கற்பித்தலை பயனுள்ளதாக்குவதோடு கற்ற விடயங்கள் மாணவர்கள் மனதில் நிலைத்து நிற்பதற்கும் உதவுவதாக அமைகின்றது. அத்தோடு ஆசிரியர்களும் மாணவர்களும் உடல்நலமும் உள நலமும் உள்ளவர்களாக இருப்பதற்கும் ஒருவரை ஒருவர் புரிந்து வாழ்வதற்கும் மிகவும் பயனுடையதாக அமைகின்றது.

ஒரு மனிதனுக்கோ அல்லது குழந்தைக்கோ மனநலம் நன்றாக இருக்க வேண்டும். மனநலம் என்பது உடல், உளம், சூழல் சார்ந்தது. மூன்று பக்கங்களும் சமமாக இருக்க வேண்டும். அதாவது அவனது உடலும், உள்ளமும், அவன் வாழும் சூழலும் சாதகமாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவனது வாழ்வு சந்தோசமுடையதாக இருக்கும். இதனை ஒரு முக்கோணத்தினால் விளக்கலாம். ஒரு பக்கம் உடல்நலமும், இன்னொரு பக்கம் உளநலமும், மறுபக்கம் சூழலும் எனக் கொண்டால், மூன்றும் சமமாக இருப்பின் அவன் நலமுள்ளவனாக இருப்பதாகக் கொள்கிறோம். ஒன்று குறைந்து, ஒன்று கூடியிருந்தாலும் அவன் பாதிக்கப்படுபவனாகக் கொள்வர். ஆதலால் சமூகம் ஒரு பிள்ளையின் விருத்தியிலும், ஆளுமையிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. அதேபோல் பிள்ளையின் உடலும் உள்ளமும் நலமாக இருந்தால் அவன் நலமாக இருப்பதாகக் கொள்ளலாம்.

ஒரு தாயின் கருவறையில் குழந்தையினுடைய கருவுறுகாலம் முதல் முதிர்ச்சி வரையிலான விடயங்களை பற்றி ஆராயும் குழந்தை உளவியல் குழந்தைகளின் உலகம் எனக் கருதப்படும். இன்று குழந்தை உளவியல் பல்வேறு கூறுகளாகப் பிரித்து ஆராயப்படுகின்றது. இதன் மூலம் பெறப்பட்ட பல முடிவுகள் ஆசிரியர்களுக்குப் பெரிதும் உறுதுணையாகவுள்ளன. நமது மாணிக்கவாசகர் பல அரிய தத்துவங்களைக் கூறியுள்ளார். இது மேல் நாட்டறிஞர்களுக்குத் தெரிந்திருக்க ஞாயமில்லை. அவருடைய கூற்றுக்களைப் பார்ப்போம்.

**'மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து**
**ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும்**
**ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்**
**இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்**
**மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்**
**ஈரிருள் திங்களில் பேரிருள் பிழைத்தும்**
**அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்**
**ஆறு திங்களில் ஊறு அல் பிழைத்தும்**
**ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்**
**எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்**
**ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்**
**தக்க தசமதி தாயொடு தான்படும்**
**துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்**
**ஆண்டு தோறும் அடைந்த அக்காலை**
**ஈண்டியும் இருத்தியும் எனப்பல பிழைத்தும்**
**காலை மலமொடு கடும்பகல் பசிஇநிதி**
**வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்'**

என அடுக்கிக் கொண்டே போகின்றார். அதாவது கருவறையில் கரு ஊரவாகிய நாள்தொடக்கம் அக்கரு உருவாகிப் பிறந்து உயிர்வாழும்வரை ஏற்படும் துயரங்களை எடுத்தியம்புகின்றார்.

கருவாகி ஒரு மாதத்தில் தான்றிக்காய் போலிருந்து, அது இரண்டாகப் பிளவுபடாது பிழைத்தேன். இரண்டாவது மாதத்தில் தனிவலிமை கொண்டதொரு பொருளாகப் பிழைத்தேன். மூன்றாவது மாதம் கருவின் மதநீர்ப் பெருக்கத்தால் அழிந்து விடாதபடி பிழைத்தேன். நான்காவது மாதத்தில் கர்ப்பத்தின் பேரிருள் என்னைக் கொன்றுவிடாதவாறு தப்பித்தேன். ஐந்தாவது மாதத்தில் கருக்கலைந்து செத்துவிடாதபடி பிழைத்துக் கொண்டேன். ஆறாவது மாதத்தில் சதை பிடித்து ஊறிப் பிழைத்தேன். ஏழாம் மாதத்தில் பூமியில் வீழ்ந்து விடாதவாறு பிழைத்தேன். எட்டாம் மாதத்தில் இடையூறுகளில் இருந்தும் தப்பித்தேன். ஒன்பதாம் மாதத்தில் ஏற்படும் துன்பங்களில் இருந்து தப்பித்தேன். பத்தாவது மாதத்தில் நானும், தாயும். பெறுவதற்கும், பிறப்பதற்கும் அடைந்த துயரக்கடலில் இருந்தும் பிழைத்து எழுந்தேன் என பிறக்கும்வரை ஒரு கருவும். அதனைத் தாங்கும் தாயின் வேதனைகளையும் அற்புதமாகத் தந்துள்ளார். இவற்றையெல்லாம் தாண்டிப் பிறந்து நம்மிடம் வரும் குழந்தையைப் பாதுகாப்பது நமது கடமையாகும். அந்தக் குழந்தைக்கு வாழும் வகைகளைப் புரியும்படி பழனப்படுத்த வேண்டும். அதனாலேயே நமது சான்றோர்கள் தாய்மையடைந்த பெண்ணுக்கு நலங்கிட்டும் வளைகாப்பு அணிவித்தும் அழகு பார்ப்பார்கள். ஊட்டமுள்ள உணவு கொடுத்து, நல்லனவற்றைக் கேட்கவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவார்கள். தாயூடாக நலன் குழந்தைக்குச் சென்றடைகிறது.

## பிள்ளை எப்போது கற்கத் தொடங்குகிறது?

இவ்வினாவுக்குப் பலர் பலவிதமாகப் பதில் கூறுவர். பிள்ளை கருவறையைவிட்டு எப்போது வெளிவருகிறதோ அப்போதிருந்தே கற்கத் தொடங்குகிறது என வாதிடுவோர் பலர். கருவறையில் இருந்து வெளிவந்ததும் சுவாசிக்கவும் வெளிச்சூழலைப் புரிந்து கொள்ளவும் முயற்சிக்கிறது. கைகால்களை அசைத்து நெளிந்து சூழலுக்கேற்றவாறு தன்னைத் தயார்ப்படுத்துகிறது எனவும் கூறுவர். ஆனால் கல்வியியலாளர்கள் கருவில் உருவாகும் நாள்தொடங்கியே பிள்ளை கற்கத் தொடங்குகிறது என ஆய்வுகள் மூலமும், அனுபவத்தின் ஊடாகவும் தெளிந்தும் கூறுகின்றனர்.

எறிக் எறிக்சன் என்பவர் இதனையிட்டு ஆராய்ந்தார். தாய் தந்தையரின் சேர்க்கையால் கரு உற்பத்தியாகிறது. அக்கரு ஒருகலத்தைக் கொண்டிருக்கும். அக்கலம் பலநூறு கலங்களாகப் பிரிந்து பெருகி மனித அவயங்கள் உருவாகின்றன. முதல் மாத முடிவில் 0.6 செ.மீ. நீளத்தையுடையதாக இருக்கும். இதயம், மூளை, சுவாசப்பை உருவாகும். இதயம் துடிக்கத் தொடங்கும். கருவறையில் உருவான சிசுவின் மூளையும் இதயமும் முதலாவது மாதத்திலேயே வளர்ச்சிபெறத் தொடங்குகின்றன. மூன்றாவது மாத முடிவில் அவயங்கள் உருவாகி குழந்தை அசையத் தொடங்கும். ஆறாவது மாத முடிவில் குழந்தைக்கு ஒலிகளை உணரமுடிகிறது. ஒன்பதாவது மாதமுடிவில் சுயமாக அவயங்கள் இயங்கக்கூடிய வகையில் உருவாகிவிடும். இவற்றை அவரது அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது.

**கருவறை தொடக்கம் குழந்தையின் விருத்தி அட்டவணை**

**காலம் அளவு விருத்தி**
**முதல் மாத முடிவில் நீளம் - 1/4 அங். 0.6 செ.மீ.**

**இதயம், மூளை,சுவாசப்பை உருவாகும். இதயம் துடிக்கத் தொடங்கும்.**

**02ஆம் மாத முடிவில்**
**நீளம் - 1.5 அங். 3.8 செ.மீ.**
**தோல், கை, கால், விரல்கள் உருவாகும்.**

**03ஆம் மாத முடிவில்**
**நீளம் - 3 அங். 7.6 செ.மீ நிறை - 28.3 கிராம்**
**குழந்தை அசையத் தொடங்கும்**

**04ஆம் மாத முடிவில்**
**நீளம் - 6.8 அங். 20 - 25 செ.மீ. நிறை - 169.8 கிராம்.**
**குழந்தை அசைந்து கொள்ளும்**

**05ஈம் மாத முடிவில்**
**நீளம் - 12 அங். 30 செ.மீ.**
**நிறை - 453.6 கிராம்.**
**கண்ணிமை, நகம் வளர்ச்சி, இதயத்துடிப்பைக் கேட்கலாம்**

**06ஆம் மாதமுடிவில்**
**நீளம் - 15 அங். 40 செ.மீ. நிறை - 493.6 கிராம்.**
**அழும், காலடிப்பாதம் தோற்றம். உதைக்கும். ஒலியைப் பிள்ளை உணரும்**

சண்முகம் அருளானந்தம்
(கேணிப்பித்தன்)

# ஆயரின் பெயரில் அமைந்து அரும்பணியில் 'பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்' நிறுவனம்

## யாழ் ஊடக அமையத்துடன் இணைந்து புதிய ஊடகப்பணிகள் – 05

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம் இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

**யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பெயரிலே பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் அமைந்துள்ளமை அனைவரும் அறிந்ததே. யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகைக்கு பிறந்த தினம் ஜூலை13, பெயர் கொண்ட தினம் ஜூலை 03, ஆயர் பட்ட தினம் ஜூலை 30, யாழ் ஆயர் நியமன தினம் ஜூலை 06 என ஜூலை மாதம் முக்கிய மாதமாகும். 2022ஆம் ஆண்டு 84ஆம் அகவையில் கால்பதிக்கும் வேளை அவரைக் கௌரவிக்கும் விதமாக அவரின் வாழ்வையும் 34 ஆண்டு கால ஆயர்ப் பணியையும் விளக்குகிறது இக்கட்டுரை.**



பிசப் சவுந்தரம் மீடியா சென்றறில் ஊடக இளம்கலைமாணி பட்டத்தை பெற்ற முதல் அணியினர் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இயக்குநர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாருடன் 2016ஆம் ஆண்டு பட்டமளிப்பில் எடுத்த படம்.

### யாழ். மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் வாழ்வும் பணியும்

1938 ஆம் ஆண்டு ஊர்காவற்துறையில் பிறந்த இவர் 1963 ஆம் ஆண்டு 25 ஆவது வயதில் 'தாழ்மையோடு ஊழியம் புரிய' என்ற விருது வாக்கோடு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

1981 ஆம் ஆண்டு தமது 43 வயதில் 'அனைத்தும் நற்செய்திக்காகவே' என்ற விருது வாக்குடன் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு - மன்னார் மறை மாவட்டத்தின் முதலாவது ஆயராக (1981 - 1992) 11 ஆண்டுகளும், யாழ் மறை மாவட்டத்தின் 10 ஆவது ஆயராக (1992 - 2015) 23 ஆண்டுகளுமாக மொத்தமாக 34 வருடங்கள் ஆயர்ப்பணி புரிந்து, குருத்துவ வெள்ளி விழா (1988), ஆயர்த்துவ வெள்ளி விழா (2006), குருத்துவப் பொன் விழா (2013), 75ஆவது பிறந்த தின விழா (2013) என படிப்படியாக விழாக்களைக் கொண்டாடி மகிழ்ந்து 2015 இல் பணியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அவரது குருத்துவப் பணிக்கால 18 ஆண்டுகள் (1963 - 1981). யாழ் மரியன்னை பேராலயம் (1964 - 1965),வழிமீசாம் (1966 - 1967),பெரியவிளான் மற்றும் யாழ் மறை மாவட்ட படப்பிரிவின் இயக்குநர் (1967) , பண்டத்தரிப்பு - மூளாய் - சங்கானை (1968), நானாட்டான் (1969 - 1971), வங்காலை (1971 - 1973), மறைக்கல்வி டிப்ளோமா பெங்களூர் (1973), யாழ் மறைக்கல்வி நிலைய இயக்குநர் (1973 - 1977), உரோமை உர்பானியானா பல்கலைக்கழக கலாநிதிப் பட்டம் (1977 - 1981) என வேகமாக நகர்ந்து சென்றுள்ளன.


கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக இணைப்புப் பெற்ற பிசப் சவுந்தரம் மீடியா சென்றறில் ஊடக முதுகலைமாணி பட்டத்தை முதல் வகுப்பில் சித்தி பெற்ற ஏ.ஜீவா போல் அடிகளார் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இயக்குனர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் - மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மற்றும் ஊடக முதுகலைமாணி பட்டத்தை பாலதாஸ் பிரியன் அடிகளாருடன் 2016ஆம் ஆண்டு பட்டமளிப்பில் எடுக்கப்பட்ட படம்.

### மன்னார் மறைமாவட்ட ஆயராக நியமனம்

அப்போதைய திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் பாப்பரசர் மன்னார் - வவுனியா நிர்வாக மாவட்டங்களை இணைத்து மன்னார் மறைமாவட்டத்தை வரையறுத்தமை (24 ஜனவரி 1981), மடுப்பதியில் ஆயர்ப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டமை (30 ஜூலை 1981), புதிய மன்னார் மறைமாவட்டத்தை பொறுப்பெடுத்துக் கொண்டமை (02 ஓகஸ்ட் 1981) எல்லாம் இதற்கு பின்னே நடைபெற்ற சரித்திர நிகழ்வுகள் ஆகும்.

மன்னார் மறைமாவட்டம் பற்றிய முழுமையான அறிவும் - நிறைவான அனுபவமும் - தேவையான ஆற்றலும் உடைய மன்னார் மறைமாவட்ட மண்ணின் மைந்தர் ஏ.சேவியர் குருஸ் அடிகளாரை மன்னார் மறை மாவட்டத்தின் முதல் குரு முதல்வராக நியமித்துத் தனது மன்னார் மறைமாவட்டப் பணியின் 11 ஆண்டுகளும் அவரை பணியாற்ற அனுமதித்தமை தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையின் திட்டமிடலையும் மதிநுட்பத்தையும் வெளிக்காட்டுகிறது.

மறைக்கல்விப் பணிகளை மேற்கொள்ள புனித சூசையப்பர் மறைக்கல்வி நிலையம் - மனித முன்னேற்றப் பணிகளை செம்மைப்படுத்த வாழ்வு உதயம் மற்றும் குரோன் என அழைக்கப்படும் வட கிழக்கு கத்தோலிக்க புனர்வாழ்வு நிறுவனம் - மறைபரப்புப் பணிகளில் பங்குகொள்ள திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகள் மற்றும் திருப்பாலத்துவ சபை - குடும்பப் பணிகளைக் கட்டி எழுப்ப குடும்ப பணி ஆணைக்குழு - ஊடகப் பணிகளை ஆற்ற மன்னா பத்திரிகை - ஆரம்ப குருத்துவ உருவாக்கற் பணிகளில் கவனம் செலுத்த மடுமாதா சிறிய குருமடம் (1982) - விவிலிய அறிவினை போதிக்க வேதாகமக் குழு - அரச சார்பற்ற பணிகளை ஒன்றிணைக்க மன்னார் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் (1986) - மார் என அழைக்கப்படும் மன்னார் புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைப்பு (1985) - ஆயர் இல்லப்பணிகளை தனியாக மேற்கொள்ள ஆயர் இல்லம் (1986) எனப் பல பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

தோட்டவெளியில் வேதசாட்சிகளின் அரசி ஆலயம் - வவுனியா மற்றும் செட்டிகுளம், நானாட்டான், பரப்பாங்கண்டல் ஆகிய இடங்களில் பெண்களுக்கான விடுதி மற்றும் சிறுவர்களுக்கான தங்குமிடம் - முருங்கன் மாணவர் இல்ல விஸ்தரிப்பு - கீரிசுட்டான் பூமலந்தான் ஆகிய இடங்களில் வீடமைப்புத்திட்டங்கள் என மேற்கொள்ளப்பட்ட பல பணிகளோடு ஆள்காட்டி வெளி - ஓமந்தை - பெரியகட்டு போன்ற புதுப் பங்குகளும் உருவாக்கப்பட்டன.

மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றிய 13 குருக்களையும் ஒரு சிவப்பு நிற வானில் ஆயரே ஏற்றிக் கொண்டு தியானங்கள் - சுற்றுலாக்கள் போன்றவற்றுக்கு சென்ற அந்த ஆரம்ப அனுபவம் பசுமையானது என அவரோடு பணியாற்றிய குருக்கள் தெரிவிக்கின்றனர்.

### யாழ். மறைமாவட்ட ஆயராக நியமனம்

1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி காரிருள் வேளை கிளாலிக் கடல் அலைகளை ஊடறுத்துக் கொண்டு விசைப் படகில் இரவோடு இரவாக மேள தாளங்கள், மாலை மரியாதைகள் எதுவும் இன்றி போர்க்களமாய் அமைந்திருந்த யாழ் மறை மாவட்டத்திற்கு வந்தார்.

யாழ் மரியன்னை பேராலயத்தில் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெற்ற வரவேற்பில் (05 நவம்பர் 1992) தாம் ஆற்றப் போகும் பணிகளை இரத்தினச் சுருக்கமாக வரையறுத்தார். அதில் முக்கியத்துவம் பெற்றிருந்தது இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் மிக நீண்ட காலமாக அனுபவிக்கும் துன்ப துயரங்களுக்கு நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வினைக் காண தம்மாலான முழு முயற்சிகளையும் எடுப்பேன் என்பதாகும். தம் பணியின் இறுதிவரை தாம் கொடுத்த வாக்கிற்கு பிரமாணிக்கமாக நடந்தார் என்பதற்கு இரண்டாம் கருத்து இருக்க முடியாது.

### யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள்

யாழ் மறைமாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகளில் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடலாம்.

பண்டத்தரிப்பு குருக்கள் தியான இல்லக் கட்டடம் -

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி
- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

ஆயர் இல்லத்தில் குருக்களுக்கான கட்டடம் - புனித வளன் கத்தோலிக்க அச்சத்தில் பாதுகாவலன் மண்டபம் - வாடகைக்கு விடப்படும் கத்தோலிக்க அச்சக கட்டடத் தொகுதி - புனித மடுத்தீனார் குருமடத்தில் வாடகைக்கு விடப்படும் கட்டடம் - புனித பத்திரிசியார் கல்லூரிக் கட்டடம் - சவேரியார் குருத்துவக் கல்லூரிக் கட்டடம் - யாழ் மரியன்னை பேராலய குருக்கள் பணிமனை - செம்பியன்பற்று குருக்கள் பணிமனை - பிரமந்தனாறு இறை



ஆயரின் 75ஆவது அகவையில் வழங்கப்பட்ட பிசப் சவுந்தரம் மீடியா சென்றறின் வாழ்த்து மடல்

இரக்க ஆலயம் - பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயம் - சில்லாலை புனித யோசவாஸ் அடிகளார் நினைவாலயம் - கிளிநொச்சி திரேசாள் ஆலயமும் பங்குப் பணிமனையும் - குருநகர் புதுமை மாதா ஆலயம் - மல்லாகம் சதாசகாய மாதா ஆலயம் - அளம்பில் புனித அந்தோனியார் ஆலயம் - புதுக்குடியிருப்பு டி.மசனட் ஆலயம் - புங்குடுதீவு சவேரியார் ஆலயம் - அரியாலை யூதா ஆலயம் - பளை இராயப்பர் ஆலயம் என ஆலய கட்டுமானப் பணிகள் நகர்ந்தன.

**(தொடரும்)**

# ஜனநாயகக் கொள்கைகயை ஜனாதிபதி ரணில் தனக்குத் தேவையான வகையில் மாற்றுகின்றார்

## டிலான் பெரேரா குற்றச்சாட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரச தலைவரல்லர். தனக்குத் தேவையான வகையில் ஜனநாயகக் கொள்கையை மாற்றியமைத்துக்கொள்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவசரகால சட்டத்தை அமுல்படுத்திய போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து விட்டு தற்போது அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்து நீடித்துள்ளமை நகைப்பிற்குரியது என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

காலி முகத்திடல் அமைதி வழி போராட்டகளத்தின் மீது கடந்த மே மாதம் 09 ஆம் திகதி பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் சகல பிரச்சினைகளுக்கும் ஆரம்பமாகக் காணப்பட்டன.

அன்று அந்தத் தாக்குதல் இடம்பெறாமலிருந்திருந்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி இன்று ஜனாதிபதியாகிருக்கமாட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகக் கொள்கையைத் தனக்கு ஏற்றாற்போல் சந்தர்ப்பத்துக்கு மாற்றிக்கொள்வார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்திய போது அதனைக் கடுமையாக கண்டித்து அவரை நெருக்கடிக்குள்ளாக்கியவர் இன்று அவசரகாலச் சட்டத்தை பழிவாங்கும் நோக்கில் அமுல்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரச தலைவரல்லர், அவர் மக்கள் மீது அக்கறை கொள்ளபோபவருமல்லர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் சாதாரண சட்டத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தியவர் தற்போது அவசரகாலச் சட்டத்தை எவ்வகையில் பயன்படுத்துவார் என்பது சந்தேகத்துக்குரியது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவிற்கு நாடாளுமன்றத்தில் தற்போது உள்ள ஆதரவு நிலையற்றது. சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து அரசியல் ரீதியில் புதிய சக்தி வெகு விரைவில் உருவாகும்.ஜனநாயக ரீதியான மக்கள் போராட்டத்தை முடக்க அவசரகாலச் சட்டத்தைப் பிரயோகித்தால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். – என்றார்.




# புற்றுநோய் சிகிச்சையாளர் ஒருவருக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் உதவி!

கனடாவில் உள்ள இந்தியன் றெஸ்ரோரன்ற் உரிமையாளர் சாம் அவர்களின் நிதியுதவியில் வலி.வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த விமலாதேவி என்பவரின் ஒழுங்கமைப்பில் புங்கன்குளம் பகுதியில் உள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட புற்றுநோய் சிகிச்சையாளர் ஒருவருக்கு அவரது மருத்துவத் தேவைக்காக 40 ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் க.டினேஸ், இந்த நிகழ்வை ஒழுங்கமைத்த ராசன், சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினரும் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவருமான லயன் பா.மரியதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் குடும்பத்தின் குடும்பத் தலைவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றார். கடந்த மூன்று மாதத்துக்குள் அவரது மனைவி மற்றும் மகன் ஆகியோர் இறந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# இலங்கைக்கு உதவ நடிகர் கமல் ஆர்வம்

தமிழக நடிகரும் இயக்குநருமான கமல்ஹாசன், தனது நலன்புரிச் சங்கத்தின் மூலம் இலங்கைக்கு உதவ விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கையின் துணை உயர்ஸ்தானிகர் டி. வெங்கடேஷ்வரனின் அழைப்பின் பேரில் கடந்த 24 ஆம் திகதியன்று கமல்ஹாசன், சென்னையிலுள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகரகத்துக்கு சென்றுள்ளார்.

இதன்போது இலங்கையின் இயற்கை அழகு மற்றும் சினிமாத் துறை குறித்து கலந்துரையாடினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக கமலஹாசனும் திரையுலகக் குழுவினரும் இலங்கைக்கு வருகை தரவேண்டும் என்று இலங்கையின் துணை உயர்ஸ்தானிகர் டி.வெங்கடேஷ்வரன் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

இதன்போது தனது நலன்புரிச் சங்கத்தின் மூலம் இலங்கைக்கு உதவும் தமது விருப்பத்தை கமலஹாசன் வெளிப்படுத்தியுள்ளார்.

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரினால் வறுமையில் வாடும் குடும்பத்துக்கு மாடு!

கனடாவில் உள்ள இந்தியன் றெஸ்ரோரன்ற் உரிமையாளர் சாம் அவர்களின் நிதியுதவியில் வலி. வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த விமலாதேவி என்பவரின் ஒழுங்கமைப்பில் புங்கன்குளம் பகுதியில் உள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பத்துக்கு மாடு ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்தக் குடும்பத்தின் வீடு ரயில் பாதையில் அமைந்துள்ளதால் அவர்களின் இரு மாடுகள் அண்மையில் ரயிலில் மோதுண்டு இறந்துள்ளன.அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்த மாடு வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் க.டினேஸ், இந்த நிகழ்வை ஒழுங்கமைத்த ராசன், சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினரும் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவருமான லயன் பா.மரியதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-78

### தீர்க்கதரிசன நோக்கு

லயனல் போபகே பெப்ரவரி 1984 கட்சியிலிருந்து வெளியேறும் போது அதற்கான காரணங்களையும் ஏற்படுத்தப்பட்ட தவறுகளையும் தனது ராஜினாமாக் கடிதத்தில் விவரித்து இருந்தார்.

ஓரளவுக்கு ஜே.வி.பி. பற்றிய சுய ஆராய்வானாலும் இரண்டு பகுதிகளை இந்த ஆக்கங்களுக்காக சுட்டிக்காட்ட வேண்டும்.

“எங்களிடைய இருந்த 1971க்கு முன்னான தீவிர இடதுசாரி போக்கு, 1977 க்கு பின்னர் தீவிர வலதுசாரி தன்மைகளைக் கொண்டதாக மாறியது. அதேபோல இந்த வலதுசாரித்தன்மை திரும்பவும் தீவிர இடதுசாரிப் போக்குக்கு திரும்பலாம். எங்களைப் போன்ற இயக்கங்களில் இவை சர்வசாதாரணமானவையும் காலத்துக்குக்காலம் நடப்பவையும்தான். அதனைப் பல சர்வதேச அமைப்புகளின் சரித்திரங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். எங்களால் இவ்வளவு அர்ப்பணிப்புகளோடும் எதிர்பார்ப்புகளோடும் உருவாக்கப்பட்ட பொதுமக்கள் தொடர்புகளுக்கான பலத்த கட்டமைப்புகளும், 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் பின்பும், நாங்கள் 1983இல் தடை செய்யப்பட்டமையோடும் அழிந்து விட்டன. நாம் நடத்தி வந்த பத்திரிகைகள் யாவும் 1983 தடை உத்தரவுடன் வெளிவராமல் போயின. (ஒரு சிறு திருத்தம்: ஜே.வி.பியினர் தமிழில் வெளியிட்ட சஞ்சிகையின் பெயர் ‘செஞ்சக்தி’. அதனை ‘செங்கதிர்’ என்று நான் முன்னர் குறிப்பிட்டமை தவறு. அந்தக் கலவர காலங்களில் கொகிலவத்தையில் இருந்த அவர்களின் அச்சகமும் அழிக்கப்பட்டது.) நாங்கள் எங்களது மக்களிடையே மிகச் சிறுபான்மையினர் ஆக்கப்பட்டுள்ளோம் என்பது மட்டுமின்றி கட்சி என்ற வகையில் எந்தவித கட்டுக்கோப்பும் இல்லாமல் உள்ளோம். இந்த உண்மைகளை மக்களிடமிருந்து மறைத்து, உண்மைகளும் ஆதாரங்களும் மற்ற எங்களது பலம் என்று கட்சியை கட்டி எழுப்ப முயலலாம். அதன் வழிவகைகளில் ஒன்றாக சில அங்கத்தினர் தீவிர இடதுசாரி நடவடிக்கைகளில் ஈடுபடலாம். இதனை நான் எனது எண்ணங்களில் அறிவதால் நான் கடைசியாக ஒரு பணிவான கோரிக்கையை வைக்கிறேன். அப்படியான செயல்கள் கணக்கெடுக்க முடியாத விளைவுகளையும் நட்டங்களையும் ஸ்ரீலங்காவின் சோசலிசப் புரட்சிக்குக் கொண்டு வரும். அதனால் அப்படியான நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டுகிறேன். அப்படியான சாகச நடவடிக்கைகள் மேற்கொள்வதானால் 1971 இன் படிப்பினைகளை மறந்தவர்களாவோம்.” – என்றார்.



சோமவன்ஸ அமரசிங்க, உபதிஸ்ஸ கமநாயக்க, விஜேவீர போன்ற மத்திய குழுத் தலைவர்களின் கடுமையான நிலைப்பாடுகள், அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையைப் பற்றி எடுத்தவற்றை ஒட்டி பின்வருமாறு போபகே பதிந்தார்:–

“எங்களைப் போல புரட்சிகரமான முன்னணிக்கு தமிழ் மக்களிடையே இருந்து எழுந்து வரும் – வன்முறையை அணைத்துக்கொள்ளும் – குழுக்களோடு சில தொடர்புகளை ஏற்படுத்துவது கடமையாகிறது. அவர்கள் வன்முறையை நம்பி இருந்தாலும், அது அவர்களின் தொடக்கங்களாக இருந்தாலும் – அவர்கள் நாளடைவில் விரும்பினால் முறையான வழிகளில் அவர்களை ஈடுபடுத்தி செயல்பட வைப்பது எங்களைப் போன்ற புரட்சி வாத அமைப்புகள் செய்ய வேண்டியதுதான். அதை விட்டு, அரச பயங்கரவாதத்தையும், இது அவர்களால் எங்களுக்கும் ஏவப்படும் எனக் காரணங்கள் காட்டி அவர்களது தொடர்புகளை தவிர்ப்பதும் இந்த நாட்டின் எதிர்காலத்துக்கு நன்மை தரப்போவதில்லை. ஒரு நாடு தழுவிய போராட்டத்திற்கான புரட்சியில் தமிழ் மக்களை இணைப்பது, அவர்களோடு இணைந்து அவர்கள் கோரிக்கைகளுக்கு ஆதரவும் நியாயங்களும் தேடுவதும்தான் சரியானது. அவர்களை – அவர்களது கோரிக்கைகளை – கண்டு பயந்து ஒதுக்குவதனால் நாம் எதையும் பெற்று விடப் போவதில்லை” – என்றார் போபகே.



பின்னர் போபகே கைது செய்யப்பட்டு நான்காம் மாடியில் பலத்த சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார். படிப்புக்கு உகந்த, பண்புள்ள, மென்மையான அணுகுமுறைகள் கொண்ட இவர் போன்ற செயற்பாட்டாளர் மிருகத்தனமான தாக்குதல்களுக்கு உள்ளாகி கேவலப்படுத்தப்பட்டு தனிமனித கௌரவங்களை எல்லாம் விட்டு முரட்டுத்தனங்களுக்கு அடிமையாக வேண்டும் என்று நிர்பந்திக்கப்பட்டார்.

பின்னர் அவர் மனைவி அவரைப் பார்க்க அனுமதிகள் பெற்று நான்காம் மாடிக்குப் போகும்போது அவமானப் படுத்தப்பட வேண்டும் என்பதற்காக அவர் விசாரிக்கப்படும் மேசையினதும் அதனை அடுத்த கதிரையினதும் கால்களில் கட்டி வைத்து, நாயைப் பார்ப்பது போல பார்த்துவிட்டு போகலாம் என்று அகங்காரங்கள்தான் காட்டப்பட்டனவாம்.

பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்படும் திட்டங்களின் ஊடாக பலேகல்ல முகாமில் வைக்கப்பட்ட பின்பு ஜப்பானுக்கு வேலைக்கு அனுப்பப்பட, அங்கிருந்து ஆஸ்திரேலியாவில் வந்து குடியேறினார் போபகே.

அவர் எதிர்பார்த்ததை போல ஜே.வி.பி. அங்கத்தினர்கள் 1971 க்கு முன் போல் தலைமுறைவாகிய வழிகளில் பொது வாழ்வில் இல்லாத முன்னெடுப்புகளை கட்சியை வளர்ப்பதற்காக எடுத்தனர். தமிழ் விடுதலைக் குழுக்கள் போல அவர்களுக்கு ஆயுதங்களுக்கு உதவிகள் வரவில்லை.

ஆங்காங்கே வழிப்பறிப்புகளிலோ, தாக்குதல்களிலோ கைப்பற்றிய ஆயுதங்களைத் தான் பாவித்தார்கள். அந்த வளர்ச்சிகளுக்கோ, அதன் தாக்கங்களின் விவரங்களுக்கோ போகாமல், 1987இல் இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்தியா ஸ்ரீலங்காவின் இறைமையைப் புறக்கணித்து ஏகாதிபத்தியவாதியாக உள்நுழைகிறது எனத் தங்களது இரண்டாவது புரட்சியைத் தொடங்கினார்கள்.

அதன் முதற்படியாக அவர்களது ஆதரவாளரான இராணுவச் சிப்பாய் ராஜீவ் காந்திக்குக் கொடுக்கப்பட்ட இராணுவ மரியாதைக்கான அணிவகுப்பின் போது தனது துப்பாக்கிப் பிடியினால் ராஜீவ் காந்திக்கு அடித்தமை சர்வதேசத்தில் ஓங்கி ஒலித்தது.

(தொடரும்)

